
# பாரி வேள்

கி. வா. ஜகந்நாதன்



# பாரி வேள்

(வரலாறு)

கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு] [விலை ரூ. 87 ந.பை

அமுதம்—88
முதற் பதிப்பு, நவம்பர்-1954
இரண்டாம் பதிப்பு ஜூன்-1956
மூன்றாம் பதிப்பு, ஜூன்-1957
நான்காம் பதிப்பு மே-1958

Printed on
Double Crown White Printing Paper—24 Lbs.

*Approved by the Text Book Committee for class use* **Nondetailed Study** *for High School forms vide consolidated list page 27 supplement to Part I-B of Fort St. George Gazette dated 4—5—'55*

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

# முன்னுரை

சங்கப் பாடல்களின் வாயிலாகப் பல புலவர்களையும் புரவலர்களையும் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். சிந்தனைச் செல்வமும் கற்பனை வளமும் படைத்த புலவர்கள் பண்பிலே சிறந்த சான்றோர்களாகவும் விளங்கினார்கள். அதனால் பண்புடைய மக்களை அணுகி அவர்களுடைய இயல்புகளைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினார்கள். அவர்களுடைய பாராட்டைப் பெற்ற குரிசில்கள் இறந்தும் இறவாதவர்களாகப் புகழுடம்புடன் விளங்குகிறார்கள். அவர்களுக்குள் சிறந்தவர்களாக ஏழுபேரைத் தமிழிலக்கியம் எடுத்துச் சொல்கிறது. ஏழு வள்ளல்கள் என்று அவர்களை ஒருங்கே சொல்வது மரபாகிவிட்டது. பிற்காலத்தில் வேறு இரண்டு வள்ளல் வரிசைகளைப் புராணங்களிலிருந்து எடுத்துக் கோத்துவிட்டதனால் இவர்களைக் கடையெழு வள்ளல்கள் என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. ஆனால் இந்த ஏழு வள்ளல்களே சரித்திர புருஷர்கள்; இவர்களுடைய வரலாற்றுக்கு இலக்கிய ஆதாரங்கள் இருக்கின்றன,

இந்த ஏழுவள்ளல்களிலும் தலைசிறந்தவன் பாரிவேள். இன்று பிரான்மலை என்று வழங்கும் பறம்பு மலையில் வாழ்ந்தவன் அவன். புலவர் பெருமக்களிற் சிறந்த கபிலரும் பாரியும் ஆருயிர் நண்பர்கள். கபிலருடைய பாட்டுக்களில்தான் பாரி இன்றும் வாழ்கிறான். அவனுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ளப் புறநானூற்றிலுள்ள பல பாடல்களும் சில தனிப்பாடல்களும் உதவியாக இருக்கின்றன.

இந்தப் புத்தகத்தில் உள்ள வரலாறு பெரும்பாலும் சங்கநூற் செய்யுட்களை அடிப்படையாகக் கொண்டு

உருவாக்கப்பெற்றது. கற்பனையினால் நிகழ்ச்சிகளை விரித்து, உரையாடலைக் கூட்டி, வரலாற்றைத் தொடர்புடையதாக்கி யிருக்கிறேன். பாரியின் பண்புகளையும் கபிலருடைய உணர்ச்சிகளையும் படிப்பவர்கள் உள்ளத்தில் பதியச் செய்யவேண்டு மென்பது என் ஆசை. அது எம் மட்டில் நிறைவேறி யிருக்கிறதென்பதை இதைப் படிக்கும் அன்பர்கள் தாம் சொல்லவேண்டும்.

கல்யாணபுரம், மயிலாப்பூர்
14—11—54

**கி. வா. ஜகந்நாதன்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பறம்பு மலை | ... | 1 |
| 2. | கபிலர் வருகை | ... | 7 |
| 3. | கபிலர் நட்பு | ... | 15 |
| 4. | முல்லைக்குத் தேர் | ... | 19 |
| 5. | முதல் இடம் | ... | 27 |
| 6. | கபிலர் பாட்டு | ... | 30 |
| 7. | மணம் மறுத்தல் | ... | 37 |
| 8. | முற்றுகை | ... | 42 |
| 9. | வெற்றி | ... | 54 |
| 10. | வஞ்சச் செயல் | ... | 61 |
| 11. | துயர் வெள்ளம் | ... | 68 |
| 12. | மண முயற்சி | ... | 78 |
| 13. | கபிலர் மறைவு | ... | 85 |
| 14. | திருமணம் | ... | 92 |

# தேசிய கீதம்

ஜனகண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்க
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்க
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஷ மாகே,
காஹே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே, ஜய ஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜய ஹே

—மகாகவி இரவீந்திரநாதர்.

# தேசீய கீதத்தின் பொருள்

*இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.*

*நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும் குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.*

*அது விந்திய ஹிமாசல மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.*

*இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது. அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.*

*இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி.*

# பாரி வேள்

## பறம்பு மலை

காற்று இனிமையாக வீசுகிறது. மரங்களில் மலர்கள் விரிந்து மணக்கின்றன. அந்த மணத்தைத் தாங்கிக்கொண்டு, தான் பெற்ற செல்வத்தைப் பிறருக்கும் அளிக்கும் வள்ளலைப்போல எங்கும் பரப்புகின்றது காற்று. கிளிகள் கீச்சுக் கீச்சென்று கத்துகின்றன. குயில்கள் கூவுகின்றன.

அடர்ந்த காடுதான் இது. ஆனாலும் மனிதர் இயங்கும்படி இடையிடையே வழிகள் இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் பலா மரங்கள். கனிந்த பழங்கள் வெடித்து அவற்றிலிருந்து சாறு வழிந்து ஓடுகிறது. அந்தப் பழத்தைத் கண்டு தொட்டுத் தொட்டுப் பார்க்கிறது ஒரு குரங்கு. தொட்ட விரலை நாவில் வைத்துக் கொள்கிறது. ஆ! அது குதிக்கிறதைப் பார்த்தால் அதற்குள்ள மகிழ்ச்சி நன்றாகப் புலனாகிறது. தன் கையால் பலாப்பழத்தின் வெடிப்பைப் பிளந்து கனிந்த சுளைகளை எடுத்துத் தின்கிறது. இப்போது அது கண்ணை மூடிக் கொண்டபடியே பலாப்பழத்தின் சுவையை அநுபவிக்கிறது !

எங்கே பார்த்தாலும் சுனைகள் ; பெரியனவும் சிறியனவுமாகப் பல சுனைகள் இருக்கின்றன. கண்ணாடியைப் போலத் தெள்ளத் தெளிந்த நீர் நிறைந்த சுனைகள் அவை. பெரிய சுனைகளில் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன.

சில இடங்களில் மூங்கில்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. மூங்கிற் காடு என்றே சொல்லவேண்டும். பல காலமாக வளர்ந்தவையாதலால் வானுறவோங்கி நிற்கின்றன. பல மூங்கில்களில் நெல்லைக் காணலாம்.

இயற்கைத் தேவி தன்னுடைய எழில் நலங்களை வஞ்சகமின்றி வாரி வழங்கியிருக்கும் இடம் இது. மலையின்மேல் உள்ள விரிவான பரப்பில் இந்தக் காட்சிகளைக் காண்கிறோம். மலைச் சாரல்களிலோ கண்ணைக் கவரும் வேறு பல காட்சிகள் உள்ளன. அங்கங்கே காட்டை அழித்துத் தினையை விதைத்து அந்நிலத்து மக்கள் பயிர் பண்ணியிருக்கின்றனர். ஒரு சார் வரகை விதைத்துப் பயிர் செய்கின்றனர். தினைக் கொல்லையினூடே அவரையையும் மொச்சையையும் போட்டுக் கொடிகளை ஓடவிட்டிருக்கின்றனர். சில இடங்களில் எள்ளுச் செடிகள் தளதளவென்று வளர்ந்திருக்கின்றன.

சலசலவென்று ஓடும் அருவிகள் சில இம் மலைச் சாரலை அழகு செய்கின்றன. மழைக்குப் பஞ்சமே இல்லாத இந்த மலையில் அருவியில் ஒரு கணமாவது நீர் குறைவதில்லை. நெடுந்தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு இவ்வருவிகள் மெல்லிய துகில் அசைவது போலத் தோன்றும்.

இதுதான் பறம்பு மலை; குறிஞ்சி நிலத்துக்குரிய வளப்பம் அனைத்தும் குறைவின்றி நிறைந்து

விளங்கும் மலை ; தமிழ்ப் புலவர்களின் பாடல்களில் என்றும் மாயாமல் வாழும் பாரி வேளின் மலை.

எளிதில் உணவுப் பொருள்கள் இங்கே கிடைக்குமானாலும் இங்குள்ள மக்கள் சோம்பல் இல்லாமல் பல தொழிலும் செய்வார்கள். தினையை விதைத்துப் பயிர் செய்து பாதுகாப்பது, வரகு, எள் முதலியவற்றை விளைப்பது, பலாப்பழங்களைக் கொண்டுவந்து அவற்றிலுள்ள கொட்டைகளை எடுத்து மாவாக்குவது முதலிய செயல்களில் ஈடுபடுவார்கள். மலைக்குக் கீழே உள்ள ஊர்களுக்கு மலையில் விளையும் பண்டங்களாகிய சந்தனம், தேன் முதலியவற்றைக் கொண்டு போய் விற்றுவிட்டு, நெல், உப்பு முதலிய பண்டங்களை வாங்கி வருவார்கள்.

பறம்பு மலையின் நடுவில் மக்கள் வாழும் ஊர் இருந்தது. அதன் நடுவே இறைவன் திருக்கோயில் ஒன்று உண்டு. பாரி வேள் அவ்விடத்தில் அரண்மனை கட்டி வாழ்ந்து வந்தான். தனக்கு வேண்டிய அளவுக்கு ஒரு சிறு மாளிகை கட்டிக்கொண்டு அதில் இருந்து வந்தான். அவனுடைய வீரமும் கொடையும் தமிழ் நாடு முழுவதும் அறிந்தவை. ஆதலால் நாள் தோறும் பல இடங்களிலிருந்து அவனைப் பார்க்கப் புலவர் பெருமக்கள் வந்து செல்வார்கள்.

பாண்டி நாட்டில் இன்று பிரான்மலை என்ற பெயரோடு விளங்கும் மலையே பாரி வாழ்ந்திருந்த பறம்பு மலை. சேர நாட்டிலிருந்தும் சோழ நாட்டிலிருந்தும் பாண்டி நாட்டிலிருந்தும் பல புலவர்கள் ஆறுகள் கடலை நோக்கி வருவதுபோல வந்து கொண்டே இருப்பார்கள். பாரி முடியுடை மன்னர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னர்களைப் போன்றவன்

அல்லன்; அவன் ஆட்சியின் கீழ்ச் சோழ நாட்டைப் போன்ற பெரிய மண்டலம் அமைந்திருக்கவில்லை. அவன் குறுநில மன்னர்களில் ஒருவன். அக்காலத்தில் தமிழ் நாட்டில் குறுநில மன்னர் பலர் இருந்தனர்; சிறு சிறு நாடுகளைத் தங்களுடைய ஆட்சி நிலமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அவர்களை வேளிர் என்று சொல்லுவார்கள். அவர்கள் கோட்டை, நாடு, நகரம், மலை முதலியவற்றை உடையவராக இருந்தாலும் பெரிய நிலப்பரப்பை ஆட்சி புரியாமையால் குறுநில மன்னர்களாக இருந்தார்கள். பிற்காலத்தில் ஜமீன்தார் என்று வழங்கியவர்களைப் போன்றவர்கள் அவர்கள் என்று சொல்லலாம்.

பாரி அத்தகைய வேளிருக்குள் ஒருவன். அவனைப்போல ஆய், காரி முதலியவர்கள் தமிழ் நாட்டில் இருந்தார்கள். பாரியின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டுக்குப் பறம்பு நாடு என்று பெயர் வழங்கியது. முந்நூறு ஊர்களை உடைய அந்த நாட்டினிடையே உயர்ந்து ஓங்கி நின்றது பறம்பு மலை. அந்த மலையின்மீதே வாழ்ந்தான் பாரி. மலையின்கீழ் உள்ள ஊர்களுக்கும் வந்து சில முறை தங்குவான். புலவரை எதிர்கொண்டழைக்க மலையை விட்டு வருவதும் உண்டு.

தன்னை நாடி வந்த புலவர்களுக்குப் பாரி நல்கும் பொருள்களுக்கு எல்லை இல்லை. தேர் கொடுப்பான்; குதிரை கொடுப்பான்; ஊர் கொடுப்பான். பாணர்களுக்குத் துகிலும் பட்டும் அளிப்பதோடு பொன்னாற் செய்த பூவை அளிப்பான். அக் காலத்தில் இது தமிழ் நாட்டில் இருந்து வந்த வழக்கம். பொற் பூவைப் பெற்று மகிழ்ந்தார்கள் பாணர்கள். பாணர்களோடு

வரும் விறலியர்கள் ஆடிப் பாடி இன்புறுத்துவார்கள். அவர்களுக்குப் பொன்னாலான அணிகலன்களை வழங்குவான் பாரி. கூத்தில் வல்ல கூத்தர் வருவர். அவர்களும் பலவகைப் பரிசிலைப் பெற்றுச் செல்வார்கள்.

புலவர், பாணர், விறலியர், கூத்தர் ஆகிய கலைஞர்கள் எப்போதும் ஊர் ஊராகச் சென்று கொண்டே இருப்பார்கள். எங்கே பழம் கிடைக்கும் என்று தேடிச் செல்லும் பறவைகளைப் போலவும், தேன் உள்ள மலர்களை நாடிப் பறந்து போகும் வண்டுகளைப் போலவும் கலைநயம் தெரிந்து பாராட்டிப் பரிசு அளிக்கும் வள்ளல் எங்கே இருக்கிறான் என்று ஆராய்ந்து தேடி நாடிச் செல்லும் இயல்புடையவர்கள் அவர்கள். யாரேனும் ஒரு வள்ளலை அணுகி அவனிடம் பரிசு பெற்றால் அவன் பெருமையைப் பாராட்டுவார்கள். புலவர்கள் இனிய பாடல்களால் புகழ்வார்கள். தம்மை ஒத்த கலைஞர்கள் எதிர்ப்பட்டால் அவர்களிடம் அந்த வள்ளலின் பெருமையை எடுத்துச் சொல்லி, ''நீங்களும் அங்கே போங்கள்; உங்களுக்குப் பரிசு கிடைக்கும்'' என்று தூண்டுவார்கள்.

வெறும் பரிசைக் கருதி மாத்திரம் அவர்கள் ஒருவரை அணுகுவதில்லை. தம்முடைய கலைத் திறத்தை நன்கு உணர்ந்து நுகர்ந்து இன்புற்றுப் பரிசில் வழங்குபவரையே அவர்கள் அணுகினார்கள். கலையின் தரத்தை உணரும் வள்ளல்களையே அவர்கள் நாடினார்கள். வரிசை அறியாத பேய்க் கொடையாளர்களிடம் அவர்களுக்கு மதிப்பு உண்டாவதில்லை.

பாரி வரிசை அறிந்து வழங்கும் வள்ளல். புலவர் பெருமக்களின் பொற்பை உணர்ந்து போற்றும் இயல்பும் புலமையும் உடையவன். பாணர்களின்

இசையில் தன்னை மறந்து நிற்கும் பண்புடையவன். கூத்தின் வகையையும் குறிப்பையும் நன்குணர்ந்து களிக்கும் கோமான். ஆகையால் அவனிடம் வரும் புலவரும், பாணரும், விறலியரும், கூத்தரும் நாளுக்கு நாள் மிகுதியாயினர். அவனுடைய ஈகையையும் வீரத்தையும் பிற நற்பண்புகளையும் கூறும் பாடல்கள் பல எழுந்தன. அவன் புகழ் தமிழ் நாடு முழுவதும் பரவி அதற்கப்பாலும் செல்லலாயிற்று.

# கபிலர் வருகை

பாரியின் புகழைக் கேள்வியுற்ற புலவர்கள் அவனிடம் வந்து அவனுடைய உபசாரங்களைப் பெற்றுச் சில நாள் அவனிடம் தங்கினர். எத்தனை நாள் தங்கினாலும் சிறிதும் சலிப்பின்றி ஒரு நாளைப்போலவே என்றும் மாறாத அன்பு காட்டி விருந்துணவு அளித்துப் பாராட்டினான் பாரி. இனிய தமிழ்ப் பாக்களைப் புலவர்களின் வாயிலாகக் கேட்டு மகிழ்ந்தான். இடையிடையே அவன் கூறிய கருத்துக்கள் அவனுடைய நுட்பமான அறிவையும் விரிந்த புலமையையும் வெளிப்படுத்தின. பல நாட்டுப் புலவர்களோடு பழகி அவர்களுடைய கவிதைகளையும் தமிழ்ச் சுவை. ததும்பும் உரைகளையும் செவி மடுப்பதையே பொழுது போக்காகப் பெற்ற அந்த வேளுக்கு விரிந்த புலமை அமைவது வியப்பு ஆகுமா ? அறிவுடைய ஒருவனுடன் பழகுவதென்றால் புலவர்களுக்கு விருப்பம் மிகுதி. இடம் தெரிந்து உவக்கும் இயல்புடையவனென்றால் அவர்களுக்கு அவனே தெய்வம். வரிசை யறிந்து பரிசில் நல்குபவனாக இருந்துவிட்டாலோ, அவன் வாழும் இடமே அவர்களுக்குச் சொந்தமாகி விடும். பாரி அறிவிற் சிறந்தவன் ; சுவையுணர்ந்து பாராட்டுவதில் சிறிதும் உலோபம்இல்லாதவன்; வரிசையறிந்து பொருள் வழங்குவதில் எல்லா வள்ளல்களையும் விடச் சிறந்தவன். இத்தகையவனிடம் புலவர்கள் வந்து மொய்ப்பது இயல்புதானே ?

மதுரை மாநகரில் பாண்டியனுடைய ஆதரவில் தமிழ்ச் சங்கம் நடைபெற்று வந்தது. அங்கே புலவர் பலர் இருந்து தமிழாராய்ச்சி செய்து வந்தனர். அவர்களுக்குள் தலைவராக இருந்தவர் கபிலர். பாண்டியனுடைய பெருமதிப்பைப் பெற்றவர் அவர். புலவர்களும் அவரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டு வழிபட்டனர். அதற்குக் காரணம் கபிலர் இணையற்ற புலமையுடையவர் என்பது மாத்திரம் அன்று. அவருடைய சிறந்த பண்புகளும் அவரைச் சிறந்தவராகச் செய்தன. "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" என்று புலவர்கள் அவரைப் போற்றினர். அவர் பொய் பேசாத புனித இயல்பினர். அவர் ஒருவரைப் பாடினால் பாடப் பெற்றவர் தமிழ் நாட்டின் பெரு மதிப்புக்கு உரியவராவார். ஒழுக்கத்தில் சிறந்து, அன்பில் ஓங்கி, புலமையில் வீறுபெற்று, அருள் நிரம்பி விளங்கிய கபிலர் புலவர் குழுவாகிய நட்சத்திரக்கூட்டத்தில் சந்திரனைப்போல ஒளிர்ந்தார்; பல மலர்களினிடையே உயர்ந்து தோன்றும் தாமரை மலரைப்போல விளங்கினார்.

அவர் எளிதில் யாரையும் போய்ப் பார்ப்பதில்லை. அவரை விரும்பி யாரேனும் அவர் இருக்குமிடத்துக்கு வந்து பார்த்தால் அன்புடன் அளவளாவுவார். வற்புறுத்தி அழைத்துச் சென்றால் உடன் சென்று சின்னாள் தங்கி மீண்டும் மதுரைக்கு வந்துவிடுவார்.

இவ்வாறு தம்முடைய புகழைப் பரப்பி விளங்கிய கபிலரைப் பற்றிய செய்திகளைத் தன்னிடம் வந்த புலவர்கள் வாயிலாகப் பாரிவேள் அறிந்தான். அவரைக் கண்டு வணங்கி அளவளாவி இன்புறவேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு உண்டாயிற்று. பாரியினிடம்

சென்று வந்த புலவர்கள் அவனுடைய பெருமையைப் பல படியாக எடுத்துச் சொன்னார்கள். அதைக் கபிலர் கேட்டார். அத்தகைய வள்ளலைக் காண வேண்டும் என்ற ஆவல் அப் புலவர்பிரானுக்கும் உண்டாயிற்று.

ஒரு நாள் பாரிவேள் தக்க பெரியார் ஒருவரை மதுரைக்கு அனுப்பினான். கபிலரிடம் சென்று தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்கும்படி சொல்லி விடுத்தான். அவர் கபிலரை அணுகிப் பாரியின் ஆர்வத்தை எடுத்துரைத்தார். "புலவர் பலரைக் கண்டு அளவளாவி மகிழும் பேறு எங்கள் மன்னருக்குக் கிடைத்திருக்கிறது. புலவர் வாராத நாளை இழவு நாளாக எண்ணுபவர் அவர். எப்போதும் புலவர் கூட்டத்திடையே இருந்து அவர்களுடைய தமிழ்ச் சுவை செறிந்த பாடல்களிலும் உரைகளிலும் மூழ்கித் திளைப்பவர். இவ்வளவு இருந்தும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. வானத்தில் மீன்கள் எல்லாம் சுடர் விட்டு விளங்கினால் என்ன? திங்கள் தோன்றி ஒளி விட்டால்தான் என்ன? வீடுதோறும் பல விளக்குகளை ஏற்றினால் என்ன? கதிரவன் வானில் ஒளிவிடுவதற்கு ஒப்பாகுமா? புலவர்களுக்குள் கதிரவனைப் போல் விளங்கும் தங்களுடைய சந்திப்புக் கிடைக்காததை எண்ணி எங்கள் மன்னர் வாடுகிறார். நாளுக்கு நாள் தங்களைப் பற்றிய செய்திகள் அவர் காதில் மிகுதியாக விழுந்துகொண்டே இருக்கின்றன. அவற்றைக் கேட்கக் கேட்க மன்னருடைய ஆவல் தீப்போலக் கொழுந்துவிட்டுப் படர்கிறது. உலகம் புகழும் மதுரை மாநகரில் இருந்து விளங்கும் தங்களுக்கு எங்கள் ஊர் ஊராகவே தோன்றாது. தமிழை

வழிவழியே புரந்துவரும் பாண்டிய மன்னனேடு பழகும் தங்களுக்குக் குறுநில மன்னர்கள் பொருளாகத் தோன்றமாட்டார்கள். ஆயினும் உண்மையான ஆர்வமுடைய ஒருவர் பேரன்போடு அழைக்கிற அழைப்பு இது. தம்மையே அர்ப்பணம் செய்யச் சொன்னலும் அவ்வாறு செய்து தங்களை வரவேற்று உபசரிக்கக் காத்து நிற்கிருர் பாரி வேள். அவர் உள்ளத்தில் உள்ள ஏக்கத்தை யாரும் அளவிட முடியாது. ஒருகால் தாங்கள் வந்து க்ண்டு உணர்ந்து தங்கள் பாடலால் வெளியிட்டால் வெளியிடலாம்'' என்று தூது வந்த பெரியவர் சொன்ஞர்.

கபிலர் அதைக் கேட்டார். ''மாணிக்கம் உருவத்தால் சிறியது; கல் மிகப் பெரியது. அதனுல் மாணிக்கத்துக்குக் குறைபாடு உண்டோ? அதன் மதிப்பை உலகமே நன்கு உணரும். பாரிவேளைப் புகழால் முன்பே அறிவேன். அவரைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கும் உண்டு'' என்று அவர் கூறியதைக் கேட்டபோது, வந்த பெரியவருக்கு உண்டான மகிழ்ச்சியை அளவிட முடியுமா?

கபிலர் பாரிவேளைப் பார்க்கப் புறப்பட்டார். அவர் வருவதை ஏவலாளர்கள் முன்பே பாரிக்கு அறிவித்தார்கள். பறம்பு மலையினின்றும் கீழ் இறங்கி வந்து அடிவாரத்து ஊரில் ஓரிடத்தில் கபிலரை வரவேற்க வேண்டியவற்றைச் செய்தான் பாரி. வேறு பல புலவர்களையும் உடன் அழைத்துச் சென்ருன். தன் ஆட்சியில் உள்ள அதிகாரிகளையும் உடன் இருக்கச் செய்தான். பறம்பு நாட்டில் உள்ள செல்வர்களையும் பெரியோர்களையும் ஆள் விட்டு அழைத்து வரச் செய்தான். அலங்காரம் செய்த பந்தலில் கபிலருக்கு

வரவேற்பு அளித்துப் பாராட்ட ஆயத்தமாக இருந்தான் பாரி வள்ளல். வழிபடு தெய்வம் காட்சி அளிப்பதாக இருந்தால் எத்துணை ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்களோ அப்படி அந்தக் கூட்டத்தினர் அனைவரும் காத்திருந்தனர்.

அறிவிலும் ஆண்டிலும் அநுபவத்திலும் பழுத்த கபிலர் பறம்பு நாட்டுக்கு வந்தார். வரும்போதே அந்த நாட்டார் களிப்பினால் ஆரவாரம் செய்தனர். துகிலை வீசி எறிந்து தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். குடம் குடமாக நீரைக் கொணர்ந்து அவர் திருவடிகளைக் கழுவினர். நிலத்திலே விழுந்து பணிந்தனர். பழுத்த கிழவர் சிலர் அப்புலவர் சிகாமணியை அணுகி, "தேவரீர் திருவடி பட இந் நாடு பலகோடி காலம் தவம் செய்திருக்க வேண்டும்" என்று நாத் தழுதழுக்கப் பாராட்டினர்.

கபிலர் மெல்ல மெல்ல நடந்து வந்தார். குடிமக்களுடைய அன்பு அவருடைய நடையின் வேகத்தைக் குறைத்தது. கூடிய கூட்டம் அவரை மேற்செல்ல விடாமல் தடுத்தது. வழியைச் சிலர் விலக்க, அவர் மெல்ல மெல்லப் பாரியைக் காணும் பேராவலோடு நடந்தார். அவர் மெல்ல நடந்தாரேயொழிய அவர் உள்ளம் மிக மிக விரைவாகச் சென்றது. தமக்கு நடைபெறும் உபசாரத்தைக் கண்டு அவர் மனம் உருகியது. 'குடிமக்களே இவ்வளவு அன்பு பாராட்டினால் அவர்களுடைய கோனாகிய பாரி எப்படி இருப்பான்!' என்று வியந்தார். மாட மாளிகை, கூட கோபுரங்கள் மல்கிய மதுரை மாநகரத்துச் செல்வர்கள் காட்டும் அன்பையும் கூறும் பாராட்டையும் உணர்ந்தவர் அவர். ஆயினும், இந்தச் சிற்றூரில் பறம்பு

நாட்டு மக்களிற் பெரும்பாலோர் கூடி நின்று தம் அன்பு வெள்ளம்போல் பெருக்கெடுத்தோட வரவேற்கும் வைபவத்தைக் கண்டு அவர் மயங்கினர். உள்ளத்திலிருந்து பொங்கி வழியும் அன்பே உருவங் கொண்டதுபோல இருந்தது அந்தக் கூட்டம்.

மெல்ல மெல்ல நடந்து சென்றார். அவரைக் கைலாகு கொடுத்து ஓர் அதிகாரி அழைத்துச் சென்றார். வரவேற்புக்காக அமைந்திருந்த இடம் வந்துவிட்டது. இன்னிசைக் கருவிகள் ஒலித்தன. முரசு முழங்கியது. முழவு ஓசை பரப்பியது. மங்கையர் பாடினர். பாணர் யாழ் வாசித்தனர். விறலியர் கூத்தாடினர். ஒரு பெரிய சக்கரவர்த்தியை வரவேற்பது போலப் பாரிவேள் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தான்.

கபிலர் பந்தலுக்குள் கால் வைத்தார். பல நாள் பிரிந்திருந்த ஆவினைக் கண்ட கன்றைப்போல ஓடிச் சென்று புலவர் பெருமானின் திருவடிகளில் பணியப் புகுந்தான் பாரி. அவன் தம் அடிகளில் விழுவதற்கு முன் அவனைத் தாங்கித் தழுவிக் கொண்டார் கபிலர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பேச்சு எழவில்லை. சிறிது நேரம் இருதயமும் இருதயமும் பேசிக்கொண்டன. பாரி கண்களில் நீர் சுரந்தது.

நாக் குழற அன்பு பொங்க ஒவ்வொரு வார்த்தையாக வெளியிட்டான் பாரி; "புலவர் பெருமான் இங்கே எழுந்தருள நான் என்ன தவம் செய்திருந்தேன்! இந்த நாடு பண்ணிய தவந்தான் எத்தனை பெரியது! பல காலமாக ஏங்கிக்கிடந்த ஒன்று இன்று இறைவன் திருவருளால் நிறைவேறியது. என் வாழ்க்கையில் இருந்த ஒரே ஒரு குறையைத் தாங்கள் நிறைவேற்றி

விட்டீர்கள்!''—இவ்வளவையும் அவன் தொடர்ந்து சொல்லிவிடவில்லை. சிறிது சிறிதாகச் சொன்னான். அப்படித்தான் சொல்ல முடிந்தது. அவன் உள்ளத்திலே கொந்தளித்த உணர்ச்சிப் பெருக்கு அவனை அப்படி ஆக்கியது.

''பாரி மன்னா, உன்னுடைய புகழை நான் பல காலமாகக் கேட்டு வருகிறேன். தன்னுடைய உயிரைக் காட்டிலும் சிறப்பாகப் புலவரை ஓம்பும் வள்ளல் என்று உன்னைப்பற்றித் தமிழுலகமே பாராட்டுவதை நான் அறிவேன். உன்னைக் கண்டு மகிழவேண்டும் என்ற விருப்பம் எனக்கும் மிகுதியாக இருந்தது. எதுவும் உரிய காலத்தில்தான் நிறைவேறும். அருள் கூட்டி வைக்கும்போதுதான் கூட முடியும். இல்லையானால் எத்தனை முயற்சி செய்தாலும் கூட இயலாது. உன்னைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததனால் எனக்கு உண்டாகியிருக்கும் இன்பத்துக்கு ஒப்பாக எதைச் சொல்லலாம் என்று நான் தேடிக்கொண்டிருக்கிறேன். உன் பெருமை வாழ்க!'' என்று புலவர்பிரான் பேசியதை யாவரும் கேட்டனர்.

அவரைத் தக்க ஆசனத்தில் இருக்கச் செய்து மாலை அணிவித்துப் பழமும் இளநீரும் பாலும் அளித்தான் பாரிவேள். ''சற்று ஓய்வுகொண்டு மலையின் மேல் போகலாமா?'' என்று கேட்டான். கபிலர், ''ஏன், இப்போதே செல்லலாமே!'' என்று கூறவே, அந்தக் கூட்டத்தினர் யாவரும் பறம்பின் மேல் ஏறலாயினர்.

போகும்போதே கபிலர் அந்த மலையின் அமைப்பைப் பார்த்தார். அதன் வளத்தையும் எழிலையும்

கண்களால் மொண்டு மொண்டு உண்டார். இறைவனுடைய கருணையினால் நல்ல வளம் மல்கிய மலை அது என்று தெரிந்துகொண்டார். அத்தகைய வளம் பொருந்திய மலையும், அன்பிலே சிறந்து நிற்கும் குடி மக்களும், இடையறாமல் உடனிருந்து தமிழ்ச் சுவையை ஊட்டிப் புகழ்பாடும் புலவர்களும் பாரியின் தவத்தையும் அன்பையும் வள்ளன்மையையும் காட்டும் அடையாளங்களாகத் தோன்றினர். 'ஒரு சிறிய இடத்தில் இருந்துகொண்டு இத்தனை பேருடைய உள்ளத்தையும் பிணிக்கும் இயல்புடைய இப் பாரிக்கு எந்த முடி மன்னனும் ஈடாகமாட்டான்' என்ற எண்ணம் கபிலருக்கு உண்டாயிற்று.

அவர் மலைமீது ஏறிக்கொண்டிருந்தார். அவருடைய உள்ளமாகிய சிங்காதனத்தில் பாரிவேள் ஏறிக்கொண்டிருந்தான். கபிலரும் பிறரும் பறம்பின் மேற்பரப்பை அடைந்தனர். பாரியின் மாளிகைக்கு அனைவரும் சென்றனர்.

அங்கும் கபிலருக்கு வரவேற்பு நிகழ்ந்தது. பாரியின் மனைவியும் மகளிராகிய அங்கவையும் சங்கவையும் புலவர் பெருமானை வணங்கினர். "இந்தக் குடில் இன்று புனிதம் அடைந்தது" என்று பாரி புளகம் போர்ப்ப மகிழ்ந்து கூறி உபசரித்தான்.

# கபிலர் நட்பு

கபிலர் பாரியின் இயல்புகளை நன்கு உணர்ந்து கொண்டார். பறம்பு மலையில் இருந்த பாரீசன் திருக் கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தார். பறம்பு மலைப் பரப்பை ஓரளவு கண்டு மகிழ்ந்தார். இயற்கை யெழிலைக் கண்டு மகிழ்வது புலவர் இயல்பு. மற்றவர்களுக்கும் அந்த எழில் புலப்பட்டாலும் புலவர்கள் கண்டு மகிழும் முறையே வேறு. நாம் அவற்றின் வெளியழகையே ஊன்றிப் பார்ப்பதில்லை. கவிஞர்களோ இயற்கை யெழிலை நன்கு கண்டு நுகர்ந்து அதனூடே ஆழ்ந்து தம்மை மறந்து நிற்பார் கள். பூவும் புனலும், மானும் மரையும், காடும் பொழி லும் அவர்களோடு பேசும்; பேசாமல் பேசும். அவற்றின் பேச்சை உணர்ந்துகொள்ளும் நுட்பமான இயல்பு கவிஞர்களுக்குத்தான் உண்டு. கணத்துக்குக் கணம் புதுமை பெற்றுப் பொலிவதாகக் கவிஞர்களுக்கு இயற்கை காட்சி அளிக்கும். மரத்தின் ஒவ்வோர் இலையும் கவிஞர்களின் கவிதையை மௌன மொழி யிலே எழுதும் ஏடாக விளங்கும். ஒவ்வொரு பூவும் அவர்களுடைய கற்பனைக்கு மணம் ஊட்டும்; வண்ணம் தீட்டும். கல்லும் முள்ளுங்கூடக் கவிஞர்களின் பார்வையில் அழகு பெறும்.

ஆகவே, கபிலர் பறம்பு மலையின் பகுதிகளைக் கண்டபோது அங்குள்ள காட்சிகளில் சொக்கிப் போனார். பொய்கைக் கரையில் பல நாழிகை நின்று அதன் அலைகளையும் ஆழத்தையும் நீரின் தெளிவையும்

கண்டார். துள்ளிக் குதிக்கும் மீன்களைக் கண்டார். பூத்திருக்கும் மலர்களைக் கண்டு முகம் மலர்ந்தார். சின்னஞ் சிறு சுனைகளைப் பார்த்து மகிழ்ந்தார். அவர் மதுரையில் வையை யாற்று வெள்ளத்தைப் பார்த்து மகிழ்ந்தவர்; அதில் காணாத தெளிவை இந்தச் சுனை களில் கண்டார். பெரிய குளங்களைக் கண்டவர்; அவற்றிற் காணாத இயற்கை யமைப்பை இவற்றில் கண்டார். பல பூம்பொழில்களைப் பார்த்து மகிழ்ந்தவர்; அங்கே காணாத சிறப்பைப் பறம்பு மலைக் காடுகளில் கண்டார். அரண்மனையில் வளரும் மானையும் மயிலை யும் அவர் கண்டு களித்ததுண்டு; இங்கே தம் மனம் போனபடி துள்ளி விளையாடும் மானையும், தோகை விரித்து ஆடும் மயிலையும் கண்டு, சுதந்தர வாழ்வினால் அவற்றிற்கு இயல்பாக அமைந்திருக்கும் வளப்பத்தை யும் ஆனந்தத்தையும் உணர்ந்து குதூகலித்தார். எங்கே பார்த்தாலும் அவர் புதுமைக் கோலத்தைக் கண்டார்; இயல்பாக வளரும் வளர்ச்சியைக் கண்டார்.

வேங்கை மரமும் சந்தன மரமும் அவர் உள்ளத் திலே பெருமிதத்தை உண்டாக்கின. பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கும் பலா மரங்களைக் கண்டபோது அவருக்கு இன்பம் ஊறியது. மூங்கிலின் உயரத்தைக் கண்ணால் அளந்தார். சுனைகளின் ஆழத்தைக் கருத்தால் அளந்தார்.

எல்லாவற்றையும் தனக்கு உரியவையாகப் பெற்ற பாரியின் குணங்களில் கபிலர் மூழ்கித் திளைத்து மகிழ்ந்து உருகினார்.

இரண்டு நாட்கள் அங்கே தங்கினார். மதுரைக்குச் செல்லவேண்டு மென்று விடை பெற்றபோது பாரி

விம்மினன். உயிரையே பிரித்துவிடும் கொடுமையை அப் பிரிவு உண்டாக்குமோ என்று அஞ்சினன்.

"பாண்டிய மன்னனுடைய அரசவை இங்கே இல்லை. நல்லிசைச் சான்றோர் தமிழாராயும் சங்கமும் இல்லை. மாட மதுரை இங்கே இல்லை. இதனை நான் நன்கு உணர்கிறேன். இவ்வளவு சிறந்த நிலைக் களத்தில்தான் கபிலர் என்னும் ஒப்பிலா மாணிக்கத்தை வைத்துப் போற்ற வேண்டும் என்பதையும் நான் நன்றாகத் தெரிந்துகொண் டிருக்கிறேன். ஆனால்... ஆனல்...." பாரியால் பேச முடியவில்லை.

"நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கபிலர் அன்பு ததும்பக் கேட்டார்.

"என்னுடைய அன்புக்கும் ஆசைக்கும் குறை வில்லை. ஆயினும் அவற்றைக் கொண்டு நான் ஈடு செய்ய முயல்வது பேதைமை. அவ்வளவு பெரிய இடத்தில் ஒளிரும் தங்களை இந்தச் சிறிய குன்றில் வைத்திருக்கவேண்டும் என்று ஏழையாகிய நான் ஆசைப்படுவது பேதைமையிலும் பேதைமை. ஆனல் ஏதோ ஒன்று என் உள்ளத்தில் கிளுகிளுக்கிறது. தேவரீருடைய கருணை இருக்குமானல் இங்குள்ள குறைகளை யெல்லாம் நிரப்பிக்கொள்ளும் வாய்ப்பு நேரலாம் என்ற எண்ணம் ஏனே எனக்கு அடிக்கடி தோன்றுகிறது."

"பார்ப்போம். இறைவன் அருளின்படி எல்லாம் நடக்கும்" என்று சொல்லி விடை பெற்றார் கபிலர்.

"அடிக்கடி வரவேண்டும்" என்று யாவரும் வேண்டிக்கொண்டனர். "அப்படியே செய்வேன்" என்று சொல்லி மதுரைக்குப் புறப்பட்டார் புலவர்.

அங்கே போனது முதல் அவருக்கு ஒன்றுமே சுவைக்கவில்லை. பறம்பு மலையும் பாரியும் தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டதை அவர் உணரலானார். விரைவில் மறுபடியும் பறம்பு மலைக்குப் போனார். இப்படிச் சிலமுறை போய் வந்தார். ஒவ்வொரு முறையும் கபிலருக்கும் பாரிக்கும் இடையே தோன்றிய அன்பு முறுகியது; இறுகியது; வன்மை பெற்றது. அது நட்பாக மாறியது. இறுதியில் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ இயலாது என்ற நிலை உண்டாயிற்று. இருவரும் ஒருங்கே கூடி வாழ்வதுதான் இருவருக்கும் இன்பம் பயக்கும் என்ற முடிவுக்கு வந்தனர் நண்பர் இருவரும்.

பாரிவேள் குறுநில மன்னன். அவன் தன் நாட்டை விட்டு மதுரைக்குச் சென்று வாழ்வது இயலாத செயல். ஆகவே, கபிலரே பறம்பு மலைக்கு வந்து வாழ முடிவு செய்தார். இந்த முடிவு மதுரையில் வாழ்வாருக்குத் துன்பத்தைத் தந்தாலும் பறம்புநாட்டினர் அமுதத்தைப் பெற்ற வானவரைப்போலக் களிக் கூத்தாடினர். பாரி தன் வாழ்வின் பயனைப் பெற்றவன் ஆனான்.

பாரியும் கபிலரும் ஒன்றுபட்டனர். பாரியின் ஆசிரியராகவும் அமைச்சராகவும் நண்பராகவும் அவைக்களப் புலவராகவும் விளங்கலானார் கபிலர்.

# முல்லைக்குத் தேர்

வளம் செறிந்த பறம்பு நாட்டில் அடர்ந்த காடுகளும் இருந்தன. காடும் காடு சார்ந்த நிலமும் முல்லைத் திணை என்று பெயர் பெறும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாகும், பாரியினுடைய பறம்பு நாட்டில் குறிஞ்சி நிலமும் இருந்தது; முல்லை நிலமும் இருந்தது. பறம்பு மலையிலும் அதைச் சார்ந்த இடங்களிலும் குறிஞ்சி வளத்தைக் கண்டு மகிழலாம். வேறு இடங்களில் காடுகள் செறிந்த முல்லை வளத்தைக் காணலாம்.

பாரிவேள் அவ்வப்போது தன் நாட்டு மக்களைக் கண்டு அளவளாவிவிட்டு வருவான். பறம்பு மலைப் பகுதிகளுக்குச் சென்று மலை வளம் கண்டு மகிழ்ந்து வருவான். அப்படியே காட்டு வளமும் கண்டு வருவதுண்டு. குறிஞ்சி நிலத்தில் வேங்கை மரமும் தேக்க மரமும் சந்தன மரமும் பலா மரமும் ஓங்கி வளர்ந்தன. குறிஞ்சி மலரும் காந்தள் மலரும் மலர்ந்தன. மானும் மரையும் கரடியும் சிறுத்தையும் பாய்ந்து ஓடின. அருவியும் சுனையும் நீரை உதவின. அவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்தான் பாரி. தினைக் கொல்லையிலும் வரகுத் தோட்டத்திலும் குறிஞ்சி நில மக்கள் உணவு விளைவித்தனர். அங்கே சென்று அவர்களுடைய முயற்சியைப் பாராட்டினன். குறவரும் குறத்தியரும் தொண்டகப் பறையை முழக்கி முருகனை வழிபட்டுக் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்

கூத்தாடினார்கள். அவர்களுடைய பக்தியைக் கண்டு வியந்தான்.

இப்படியே முல்லை நிலத்துக்குச் சென்று அங்குள்ள காட்சிகளையும் கண்டான். அங்கே கொன்றை மரமும் குருந்த மரமும் வளர்ந்திருந்தன. முல்லை மலரும் தளவமும் மலர்ந்து மணந்தன. காறு ஓடியது. பசுமாடுகள் நிரை நிரையாக மேய்ந்தன. அவற்றைக் கண்டு களித்தான். ஆயரும் ஆய்ச்சியரும் முல்லைப் பண்ணைப் பாடிக் கண்ணனை வழிபட்டு ஆடினார்கள். அவர்களுடைய ஆட்டத்தைக் கண்டு உவந்தான்.

தம்முடைய மன்னன் வரும்போதெல்லாம் அந்நாட்டு மக்கள் அவனைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தனர். தங்கள் நிலத்தில் விளைத்த பொருள்களைக் கையுறையாகக் கொணர்ந்து அளித்தனர். பாரி குடிமக்களுடைய நன்மை தீமைகளை அவ்வப்போது அறிந்து, செய்ய வேண்டியவற்றைச் செய்தான். காட்சிக்கு எளியனாகப் பழகினான். தாயைக் குழந்தைகள் அணுகுவது போலக் குடிமக்கள் பாரிவேளை அணுகித் தம் குறைகளைத் தெரிவித்தார்கள்.

ஒரு நாள் காடு அடர்ந்த ஓரிடத்திற்குச் சென்றான் பாரி. யாரையும் அழைத்துச் செல்லாமல் தான் மட்டும் தனியே சென்றான். தேரை ஓட்டும் வலவன் மாத்திரம் உடன் இருந்தான். காட்டு நிலத்திலும் வழிகள் இருந்தன. ஆதலின் அவ்வழியே தேரைச் செலுத்தச் செய்தான். அவ்வாறு போய்விட்டு மீள்கையில் ஓர் அரிய நிகழ்ச்சி நடந்தது. அந்நிகழ்ச்சி மக்கள் உள்ளத்தில் பதிந்து, புலவர்கள் பாடலிற் புகுந்து, பாரியை மற்ற வள்ளல்களினின்றும் வேறு பிரித்துக் காட்டும் அடையாளச் செயல் ஆகிவிட்டது.

தேர் திரும்பும்போது பிற்பகல் நேரம். கதிரவன் மேல் திசையில் இறங்கிக்கொண்டிருந்தான். பறம்பு மலையின் அடிவாரத்தை நோக்கித் தேர் போய்க் கொண்டிருந்தது முல்லை நிலத்தின் வழியே போகும் போது பாரி, "தேரை நிறுத்து" என்று கூவினான். இருமருங்கும் உள்ள காட்சிகளை மெல்லப் பார்த்துக் கொண்டு சென்றமையால் தேர் மெல்லத்தான் சென்றது. இப்போது திடீரென்று தேரை நிறுத்தும் படி பாரி சொல்லவே, வலவன் நிறுத்தினான். பாரி வேள் தேரிலிருந்து இறங்கினான்.

அருகில் ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது; இளங்கொடி; நிறைய அரும்பு கட்டியிருந்தது. மாலை நேரம் வந்தால் குப்பென்று மலர்ந்துவிடும். பருவம் வந்த மட மங்கைபோல அது தள தளவென்று வளர்ந்திருந்தது. ஆனால் அருகில் பற்றுக்கோடு ஒன் றும் இல்லாமல் அது காற்றில் அசைந்துகொண் டிருந்தது. தளர் நடை பழகும் குழந்தை தட்டுத் தடுமாறி வந்து கீழே விழும் நிலையில் இருப்பதுபோல அந்தக் கொடி தளர்ந்து நின்றது. குருடன் ஒருவன் கால் தளர்ந்து எதையேனும் பற்றிக் கொள்வதற்காக நாற்புறமும் கையால் வெறும் வெளியைத் துழாவுவது போல அந்தக் கொடி அசைந்தது. நடு வழியில் துணை யின்றி நிற்கும் கன்னிப் பெண்ணைப்போல அது அலைப் புண்டு நின்றது. மெல்லிய காற்றில் அது திரும்பித் திரும்பி அசைந்தது; வளைந்து நிமிர்ந்தது. அப்போது, வழியில் போவோரை எனக்குத் துணை புரிய வாருங்கள் என்று அழைப்பதுபோல இருந்தது.

அது ஒசிந்து தளர்ந்து கொழு கொம்பின்றி அசைவதைப் பாரி கண்டான். மக்கள் வருந்து

வதைக் கண்டு மனம் குழைந்து உடனே உதவி புரி யும் இயல்புடையவன் அவன். அது பெரிதன்று. விலங்கினங்கள் துன்புற்றாலும் காணச் சகிக்காதவன். வீட்டில் உணவு சமைத்தவுடன் நம் நாட்டு மங்கையர் காக்கைக்குச் சோறு போடுவார்கள். காகங்கள் கூட்ட மாக வந்து, "கா! கா!" என்று கத்திக்கொண்டு அந்தச் சோற்றை உண்ணும். பாரியின் பறம்பு மலையில் வேறு ஓர் அரிய காட்சியைக் காணலாம். தினையரிசியையும் வேறு தானியங்களையும் இறைவ னுடைய திருக்கோயிலின் முன் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் வாரி இறைக்கச் செய்தான் பாரி. அவனும் இறைப்பான். அப்போது கிளிகளும் குருவிகளும் கூட்டம் கூட்டமாக வந்து அந்தத் தானி யங்களைத் தின்னும். இது கண்கொள்ளாக் காட்சி யாக இருக்கும். மனிதர்களைக் கண்டு அஞ்சாமல் அங்கே கிளிகள் கூட்டமாக வந்து பழகும்; குருவிகள் கொத்தித் திரியும்.

இவ்வாறு எல்லா உயிர்களிடத்திலும் அருளோடு பழகும் இயல்புடையவன் பாரி. அவன் கண்ணில் பற்றுக்கோடின்றிப் பதைபதைத்து நிற்கும் முல்லைக் கொடி பட்டது. ஓரறிவுயிராயினும் அது இறைவன் படைப்பிலுள்ள உயிர்க் கூட்டங்களில் ஒன்றுதானே? பச்சை மரங்களைக் காரணம் இன்றி வெட்டாதவர் தமிழர். நோய்க்கு மருந்தாக ஏதேனும் பச்சிலையைப் பறிக்க வேண்டுமானாலும் அதற்கு மனம் வருந்தி இறைவனை எண்ணிப் பறிப்பது மரபு. தாவிப் படரக் கொழு கொம்பு இல்லாத கொடிக்குக் கோல் ஊன்றிப் படர விடுவதை அறச் செயலாக எண்ணும் மனப் பான்மை உடையவர்கள் தமிழ்நாட்டுச் சான்றோர்கள்.

முல்லைக் கொடியின் வளர்ச்சி கண்டு மகிழ்ந்த பாரி அதன் தளர்ச்சி கண்டு மனம் நெகிழ்ந்தான். அதனைப் படர விட அருகில் மரம் இல்லை. இருந்தால் அதுவே பற்றிக்கொள்ளாதா? தன்னை அணுகும் இரவலர்க்குக் கையில் உள்ளது எதுவாயினும் வழங்கிவிடும் வள்ளல் பாரி. தன் முன் நிற்பவருடைய வறுமையை நினைப்பானே யன்றித் தான் கொடுக்கும் பொருளின் அருமையைக் கருதமாட்டான். தேர் இருந்தால் தேரைக் கொடுப்பான்; குதிரை இருந்தால் குதிரையைக் கொடுப்பான்; யானையையும் கொடுப்பான். ஒன்றும் இல்லையானால் கைவளையைக் கழற்றிக் கொடுப்பான். இன்னதைக் கொடுப்பான், இன்னதைக் கொடுக்கமாட்டான் என்ற வரையறையே இல்லை. இதைத்தான் கொடை மடம் என்று சொல்வார்கள்.

"கொம்பர் இல்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே" என்று பாடுவார்கள் பெரியவர்கள். துணை செய்வாரின்றி வாடும் மக்களின் துயரத்தைச் சுட்டுவதற்குச் சிறந்த உபமானமாகப் பற்றுக் கோடில்லாத கொடியைச் சொல்வது பழமொழியாகிவிட்டது, தமிழ் நாட்டில். பாதுகாப்பின்றித் தவிப்பவரைக் கண்டு நெகிழும் உள்ளத்திற்கு உண்மையில் கருணை இருந்தால், அப்படித் தவிப்போருக்கெல்லாம் உவமையாக இருக்கும் கொம்பில்லாக் கொடியைக் கண்டு அவ்வுள்ளம் நெகிழாமல் இருக்குமா?

பாரி முல்லைக் கொடியைக் கண்ட கணத்திலே மனம் உருகினான். அது மென் காற்றில் அலைந்து ஒசிந்த காட்சி அவன் உள்ளத்தை அலமரச் செய்தது. அதற்கு வேண்டியது கொழுகொம்பு; ஒரு பற்றுக்

கோடு. யாரேனும் உழவனாக இருந்தால் எங்காவது போய் ஒரு மூங்கிலைத் தேடிக் கொண்டு வந்து அங்கே நடுவான். வருந்துகிறவர்களைக் கண்டபோதே அருள் சுரந்து அந்தக் கணத்தில் கிடைத்ததை வீசும் பாரியால் அப்படிச் செய்ய இயலாதே! அவன் உடனே வலவனை அழைத்தான். குதிரைகளை அவிழ்த்துவிடச் சொன்னான். மெல்லத் தன் தேரையே முல்லைக் கொடியின் அருகில் இழுத்து நிறுத்தச் செய்தான். கொடியை மெல்ல அதன்மேல் எடுத்துவிட்டான். அப்போது அவனுக்கு உண்டான இன்பத்தை அளந் தறியும் ஆற்றல் யாருக்கு உண்டு? ஆழ்கடலில் மூழ்கி உயிர் போகும் தறுவாயில் இருந்த ஒரு குழந்தையை எடுத்துக் கரையில் விட்டது போன்ற உவகை அவனுக்கு உண்டாயிற்று என்று சொல்லலாமா? பல நாள் பசித்திருந்த ஏழைக்கு இலை நிறையச் சோறு போட்டதைப் போன்றிருந்தது என்று கூறலாமா? தனக்கு ஏற்ற மணாளன் கிடைக்காமல் நின்ற கன்னி ஒருத்திக்கு ஓர் ஆடவனை மணம் செய்வித்தது போன்றது என்று இயம்பலாமோ? அத்தகைய செய்கைகளை உலகம் கண்டிருக்கும். ஆனால் ஒரு கொடி தளர்வது கண்டு அதைத் தாங்கத் தன் தேரை நிறுத்திய பாரியின் செயலையும், அதற்குக் காரணமாக இருந்த அவனது உயர்ந்த அருள் உள்ளத்தையும் உவமையைக் கூறித் தெரிந்துகொள்ள முடியாது. அவற்றிற்கு அவைகளே ஒப்பு.

நாம் செல்லும் தேராயிற்றே என்று பாரி நினைக்கவில்லை. அவன் நினைவு முழுவதும் அந்தக் கொடி நின்ற நிலையிலே, அதன் தளர்ச்சியிலே ஒன்றிப் போய்விட்டது. அப்போது அவன் தேரில் வராமல்

நடந்து வந்திருந்தால், தானே கொழு கொம்பாக நின்றிருப்பான்! என்ன அருமையான பண்பு!

சிறிது நேரம் பாரி முல்லைக் கொடியைப் பார்த்தான். அது தன் அரும்புகளைக் காட்டிப் புன்முறுவல் பூத்தது. உடன் நின்ற தேரோட்டி பாரியின் செயலைக் கண்டு விம்மிதம் அடைந்தான். அந்த வள்ளலுடைய அருட் செயல்கள் பலவற்றைக் கண்டவன் அவன். ஆயினும் அந்த அருள் இவ்வளவு உயர்ந்த நிலைக்கு, மிக மிக நுட்பமான நிலைக்குச் செல்லும் என்பதை அவன் நினைத்தும் பார்க்கவில்லை.

பாரி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். முல்லை பற்றுக்கோடு பெற்றுப் படர்ந்த அழகைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான்.

பறம்பின் அடிவாரம் வந்தான் பாரி. அங்கே இருந்த குடிமக்களிடம் வலவன் தான் கண்ட அதிசயத்தைச் சொன்னான். அவர்கள் வியந்தார்கள். பாரி வேளின் மன நெகிழ்ச்சியைப் பாராட்டினார்கள். சிலர் வேண்டிய பொருள்களுடன் அவ்விடத்துக்குச் சென்று ஒரு பந்தலையே போட்டு முல்லைக் கொடியைப் படர விட்டுத் தேருக்கு விடுதலை அளித்தார்கள். காட்டு வழியில் பந்தலிலே படரும் முல்லைக்கொடி அது ஒன்றுதான். மற்றக் கொடிகளுக்கு இல்லாத பெருமை அதற்கு உண்டாயிற்று. அந்தப் பந்தல் பாரியின் தேரை நினைப்பூட்டிக் கொண்டிருந்தது. அந்த வள்ளலின் உள்ளத்தை நெகிழ்வித்த முல்லைக் கொடியை மக்கள் வந்து பார்த்துப் பார்த்துச் சென்றார்கள்.

''முல்லைக்குத் தேரை வழங்கினான் பாரி'' என்ற செய்தி பறம்பு நாடு முழுவதும் பரவியது; புலவர்கள் உள்ளத்தே வியப்பையும் களிப்பையும் படரச் செய்தது.

அவர்கள் பாடிய பாடல்களில் முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளலென்று பாரியின் புகழ் படர்ந்தது.

பாரி வேறு பல வகையில் தன் கொடைத் திறத்தை வெளிப்படுத்தி யிருந்தாலும் ஓரறிவுயிராகிய முல்லைக் கொடியின் தளர்ச்சிக்கு மனம் இரங்கித் தன் தேரை அளித்த வள்ளன்மையையே அது முதல் புலவர்களும் பிறரும் பெரிதாக நினைந்து பாராட்டினர். பாரி என்று பெயர் சுட்டாமலே 'முல்லைக்குத் தேரீந்த வன்' என்று சொன்ன அளவிலே அவனைத் தமிழுல கம் உணர்ந்து கொண்டது; இன்றும் அவன் முல்லைக் குத் தேர் வழங்கிய திறத்தைப் பாராட்டுகிறது.

# முதல் இடம்

கபிலரை அவைக்களப் புலவராகவும் உசாத்துணை வராகவும் பெற்றது முதல் பாரி வேளுக்கு முடியுடை மன்னருக்கு இல்லாத மதிப்பு உண்டாகி விட்டது. முல்லைக்குத் தேர் வழங்கிய அருமைச் செயலுக்குப் பின்பு அது பின்னும் உயர்ந்தது. கொடை வள்ளல் களைப் பற்றிப் பேசும் இடங்களிலெல்லாம் பாரியின் பெயரே முன்வந்தது. தமிழ் நாட்டு வள்ளல்களின் பெயர்களை எடுத்துச் சொல்லும் போது புலவர்கள் பாரியையே முதலில் வைத்துச் சொன்னார்கள். புலவர் பெருமக்களில் கபிலருக்குத் தலைமை நிலை கிடைத்தது போலவே, கொடையிற் சிறந்தவர்களுக்குள் பாரி வள் ளலுக்குத் தலைமை நிலை கிடைத்தது. இந்த வழக்கம் அக்கால முதல் இன்றளவும் இருந்து வருகிறது.

''யார் யாரையோ பாடாமல் சிவபெருமானைப் பாடுங்கள். அவர்கள் எல்லாம் ஒன்றும் தரமாட்டார் கள். இப்பெருமான் இம்மையில் சோறும் கூறையும் தருவான்; மறுமையில் சிவலோக பதவி வழங்குவான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு பதிகம் பாடியிருக் கிறார். திருப்புகலூர் என்னும் தலத்திற் பாடியது அது. அங்கே புலவர்களை நோக்கி,

> கொடுக்கிலா தானைப் பாரியே என்று
> கூறினுங் கொடுப் பாரிலை

என்று பாடுகிறார். வள்ளல்களை உவமையாக எடுத் துச் சொல்லப் புகும்போது பாரியின் நினைவுதான் அவருக்கு வருகிறது. மனிதர்களைப் பாட வேண்டாம்

என்று சொல்லும் அந்தப் பதிகத்திலே மறைமுகமாகச் சுந்தரமூர்த்தி நாயனார் பாரியைப் புகழ்கிறார்!

பெருஞ்சித்திரனார் என்ற சங்ககாலப் புலவர் குமணன் என்ற அரசனைப் புகழ்கிறார். "ஏழு வள்ளல்கள் தமிழ் நாட்டில் இருந்தார்கள். அவர்கள் இப்போது இல்லை. அவர்கள் காலத்திற்குப் பிறகு நீதான் இருக்கிறாய். ஆதலால் உன்னைத் தேடிவந்தேன்" என்று சொல்கிறார். அங்கே ஏழு வள்ளல்களின் பெயர்களும் வருகின்றன. அவர்கள் பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்பவர்கள். அந்த வரிசையில் முதலில் பாரியைத்தான் வைக்கிறார்.

*முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்*
*அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்*
*கறங்குவெள் அருவி கல்அலைத்து ஒழுகும்*
*பறம்பிற் கோமான் பாரியும்*

என்று பாரியைப் பாராட்டுகிறார். 'முரசைக் குறுந்தடி அடிக்கவும் வெண்மையான சங்கு முழங்கவும் வேந்தருடனே பொருதவனும், தலைமையையுடைய உயர்ந்த மலைச்சாரலில் ஒலிக்கும் வெள்ளை அருவியானது கல்லை உருட்டிக் கொண்டு ஓடும் பறம்பு மலைக்குத் தலைவனுமாகிய பாரி' என்பது இதன் பொருள்.

ஏழு வள்ளல்கள் என்று தொகுத்துக் கூறுவது மரபு. அந்த எழுவரிலும் பாரியை முதலில் வைத்துச் சொல்வதை மேலே உள்ள பாட்டில் பார்த்தோம். இப்படியே வேறு பலரும் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு பழைய பாடலில்,

*பாரி ஓரி நள்ளி எழினி*
*ஆயே பேகன் பெருந்தோள் மலையன்என்று*
*எழுவருள் ஒருவனும் அல்லை*

என்ற முறை காணப்படுகிறது. இது தொல்காப்பியத்தின் உரையில் பேராசிரியர் மேற்கோளாகக் காட்டும் பாடல்களில் ஒன்று.

பிங்கல நிகண்டில் கடையெழு வள்ளல்கள் இன்னுர் என்று குறிக்கும் இடத்திலும் பாரியின் பெயரையே முதலில் வைத்திருக்கிருர் அதன் ஆசிரியர்.

*பாரி எழினி நள்ளி ஆய் மலையன்*
*ஓரி பேகன் இவர்கடை வள்ளல்.*

இப்படியே பிற்காலத்தில் வந்த மண்டலபுருடர் தாம் இயற்றிய சூடாமணி நிகண்டில்,

*பாரி ஆய் எழினி நள்ளி*
*பசுந்தொடை மலையன் பேகன்*
*ஓரியே கடையில் உற்ருேர்*

என்று அமைக்கிருர். இந்த இரண்டு நிகண்டுகளிலும் ஏழு வள்ளல்களில் மற்றவர்களின் பெயர்கள் எப்படி மாறினுலும் பாரியின் பெயர் முதலிடம் பெற்று நிற்கின்றது.

ஏழு பேர்களைச் சொல்லாமல் சில பேர்களைச் சொல்லும் இடத்திலும் பாரியே முன் நிற்கிருன்.

*பாரி ஓரி* (தொல்காப்பியம், செய்யுள் இயல், 125, நச்சினுர்க்கினியர் மேற்கோள்)

என்பதும்,

*வண்புகழ் பாரி காரி*
*என்றிசை வாது கூறி* (திருப்புகழ்)

என்பதும் இதற்குச் சான்று பகரும்.

சங்க காலத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் வள்ளல்களின் பெருமையைச் சிறப்பித்துப் பாடும்போது பாரிக்கு முதலிடம் கொடுப்பது மரபாகிவிட்டது. பாரி வேளைத் தமிழுலகம் மறவாமல் பாராட்டும் முறை இதுவானுல் அவனுடைய பெருமையை என்னென்று விரித்துரைப்பது!

# கபிலர் பாட்டு

பாரி வேளின் அவைக்களத்தில் எப்போதும் புலவர் பலர் நிறைந்திருப்பார்கள். அந்தப் புலவர் கூட்டத்திற்குத் தலைவராகக் கபிலர் விளங்குவார். பாரியும் உடன் இருப்பான். தமிழின் மாட்சியையெல்லாம் விரித்துப் பேசுவார்கள். அவரவர்கள் தம்முடைய இனிய கவிகளை எடுத்துச் சொல்லுவார்கள். பாரி வேளின் புகழைப் பாட்டில் அமைத்துப் பாடுவார்கள்.

கபிலர் பாரியின் புகழைப் பல வகையில் பாடி மகிழ்ந்தார். ஒரு பாட்டு இரண்டு பாட்டுப் பாடின அளவில் அவருக்கு மன நிறைவு உண்டாகவில்லை. பாரியின் அரிய குணங்களில் ஈடுபட்டுக் கிடந்தவராதலின் அவன் புகழைப் பாடப் பாட அது விரிந்து கொண்டே போயிற்று. மேலும் மேலும் பாடிக் கொண்டே இருந்தார். புலவர் தலைவராகிய அந்தச் சான்றோருடைய பாடல்களைப் பெறப் பெறப் பாரி புலவர் உள்ளத்தில் உயர்ந்து நின்றான். மன்னர்களும் அவனுக்குக் கிடைத்த பெரும் பேற்றை எண்ணி வியந்தனர். பாண்டிய மன்னன், "நமக்குக் கிடைக்காத பெருமையெல்லாம் இவனுக்குக் கிடைக்கிறது" என்று எண்ணினான்; அந்த எண்ணத்தில் அழுக்காறு தலை நீட்டியது. "விரிந்த சோழ மண்டலத்தைப் பெற்று ஆளும் நம்மைவிடக் கபிலருடைய பாடல்களைப் பெற்று வாழும் பாரியின் பாக்கியமே பாக்கியம்!" என்று

சோழன் வியந்தான். "கபிலர் நம்மையும் பாடமாட்டாரா;" என்று சேர அரசன் ஏங்கினன்.

கபிலர் புதிய புதிய முறையில் பாரியின் புகழை அமைத்துப் பாடல்களைப் பாடினர். பாணர்களுடன் வந்து பாடி ஆடும் மகளுக்கு விறலி என்று பெயர். பாணனுடைய மனைவி அவள். அவளைப் பார்த்து, "நீ இன்ன செல்வரிடம் சென்று பாடினல் உனக்குப் பரிசில் தருவான்" என்று பாடுவது ஒரு முறை. அதை விறலியாற்றுப்படை என்று சொல்லுவார்கள். கபிலர் பாரியின் புகழைச் சொல்லும் விறலியாற்றுப் படை ஒன்றைப் பாடினர்.

உலகில் உள்ள செல்வர்கள் எப்போதுமே தம்மை அணுகும் இரவலர்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள் என்று சொல்ல இயலாது. சில காலம் கொடுப்பார்கள்; சில காலம் கொடுக்காமல் இருந்து விடுவார்கள். பாரி அத்தகையவன் அல்லன். அவன் எப்போதும் கொடுப்பவன். எந்தச் சமயத்தில் போனலும் இல்லையென்னது ஈயும் வள்ளல்.

இந்தச் செய்தியைக் கபிலர் தம் பாட்டிலே சொல்ல வருகிறர். இதை அப்படியே சொல்லவில்லை; குறிப்பாகச் சொல்கிறர். கவிதையில் ஒரு பொருள் குறிப்பாக அமைந்திருந்தால் அதன் சுவை மிகுதியாக இருக்கும். "விறலியே! நீ பாரிவேளிடம் சென்று பாடினல் அவன் உனக்கு நல்ல பொன்னுபரணங்களைத் தருவான். அவற்றை நீ அணிந்து மகிழலாம்" என்று சொல்கிறர். இப்படிச் சொல்வதில் சுவை தோன்றுது. "மற்ற இடங்களில் செல்வர்கள் கூடவும் குறையவும் தருவார்கள்; தராமலும் இருப்பார்கள். பாரி எப்போதும் தருவான் என்ற கருத்தையும்

பொருத்தவேண்டும். "சுனைகளில் சில காலம் நீர் இருக்கும். சில காலம் குறையும். மழை பெய்தால் தான் அவற்றில் நீர் நிரம்பியிருப்பதைப் பார்க்கலாம். ஆனால் பாரியின் பறம்பு மலையில் மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் அருவி எப்போதும் நீரோட்டம் அறாது வீழ்ந்து கொண்டே இருக்கும்" என்பதை இணைத்துப் பாடினார். "செல்வர்கள் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பாரி கொடுப்பான்" என்பதையே அவனுடைய மலையில் உள்ள அருவியை வருணிப்பவரைப் போலக் குறிப்பாகச் சொல்லி விட்டார் புலவர்.

சேயிழை பெறுகுவை வாள்நுதல் விறலி!
தடவுவாய்க் கலித்த மாஇதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும், அருவி
கொள்உழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீரினும் இனிய சாயல்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

'ஒளியையுடைய நெற்றியைப் பெற்ற விறலியே! சுனையில் தழைத்து வளர்ந்த நீல நிற இதழுடைய குவளையின் வண்டு வந்து மொய்க்கும் புது மலரில் தண்ணிய நீர்த்துளி கலக்கும்படியாக மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், அருவியானது, கொள்ளுக்

சேயிழை - செம்பொன்னலான ஆபரணம். தடவு - சுனை. கலித்த - தழைத்த. மா - கரிய. சிதர் - துளி. கலாவ - கலக்க. புலத்துழை - கொல்லையினருகே. கால் - நீர் செல்லும் வாய்க்கால். மால்பு - ஏணி. கோடு - பக்கம். சாயல் - மென்மை. பாடினை - பாடி; முற்றெச்சம்.

காக உழுத விரிந்த நிலத்தினருக்கு வாய்க்காலாக, தேனெடுப்பதற்காகச் சாத்திய ஏணிகளை உடைய உயர்ந்த மலைச்சாரற் பக்கந்தோறும் இறங்கி வரும்; அப்படி வருகிற நீரைக் காட்டிலும் இனிய மென்மையையுடைய பாரிவேளினிடம் பாடிக்கொண்டு சென்றால் செம்பொன்னாலான அணிகலன்களைப் பெறுவாய்' என்பது இதன் பொருள்.

★

ஒரு நாள் புலவர் பலர் கூடியிருந்த சபையில் பாரியைப் பற்றிய பேச்சு வந்தது. வெளிநாட்டிலிருந்து சில புலவர்கள் வந்திருந்தார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தை எடுத்துச் சொன்னார்கள். கலைஞரும் கவிஞரும் தம்முடைய ஆற்றலைக் காட்டிப் பரிசு பெற்ற செய்தியைச் சொன்னார்கள். "பாரிவேள் புலவர்களையும் அறிவுடையோர்களையும் நல்லவர்களையும் ஆதரிக்கும் பெரு வள்ளல். இவனைப் போல் வரிசை அறியும் வள்ளலை நாங்கள் எங்கும் கண்டதில்லை" என்று சிலர் கூறினர்கள். "தன்னிடம் வருகிறவர்களை நல்லவர்கள் என்றோ, கலையில் வல்லவர்கள் என்றோ ஆராய்ந்து கொடுக்கும் இயல்பு பாரியினிடம் இல்லை. வறுமையில் உழல்பவர்கள் யார் ஆனாலும் அவர்களுக்கு வழங்குவது பாரியின் வழக்கமாகிவிட்டது" என்று கபிலர் கூறினார். அதற்கு உவமையாகச் சிவபெருமானை எடுத்துரைத்தார்.

"நல்ல நிறமும் மணமும் உள்ள மலராகத் தேர்ந்து பறித்துத் தெய்வங்களுக்குப் பூசை செய்வார்கள் அன்பர்கள். சிவபெருமானோ மணமுள்ள மலரானாலும் மணமற்றதானாலும் ஏற்றுக்கொள்கிறான். எருக்கம் பூவேயானாலும் எனக்கு வேண்டாம் என்று

சொல்லாமல் ஏற்றருள்கிருன். பாரியும் அத்தகைய வனே. கலையறிவு இல்லாதவராஞலும், தாம் கற்ற கலையில் போதிய வன்மை படையாதவராஞலும் அவனை அணுகிஞல் ஏதாவது பெற்றே செல்வார்கள். பாரியின் வள்ளன்மை அத் தகையது'' என்று தம் கருத்தை விளக்கிஞர் அப் புலவர் பெருமான். அதையே பாவாகவும் பாடிஞர்.

நல்லவும் தீயவும் அல்ல, குவிஇணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை
கடவுள் பேணேம் என்ஞ; ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே.

★

பின் ஒரு நாள் புலவர்கள் கூடிப் பேசிக்கொண் டிருந்தார்கள். கபிலரும் இருந்தார். எல்லோரும் திருப்பித் திருப்பிப் பாரியின் புகழையே எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தனர். பாரி முல்லைக்குத் தேர் ஈந்ததை ஒருவர் பாராட்டிஞர். அவன் இனிமை யாகப் பேசுவதை ஒருவர் பாராட்டிஞர். தன்பால் வந்தவர்களுக்கு வரையறை யின்றி வழங்குவதை வேறு ஒரு புலவர் புகழ்ந்தார்.

---

சூடும் பூக்களில் மணத்தால் நல்லவையும் தீயவை யும் ஆகிய மலர் வரிசையிலே சேராமல், குவிந்த கொத்துக் களையும் பொலிவற்ற இலையையும் உடைய எருக்கம் பூவே யாஞலும், அன்பர் வழிபடுவதற்குக் கொண்ட அவற் றைக் கடவுளர் விரும்ப மாட்டேம் என்று சொல்லார். அப் படியே, கலையை அறியாதாரும், வன்மை பெருத குறை யுடையவரும் சென்ருலும் பாரி தன் கொடைத்தொழிலைச் செய்வான்.

இணர்-கொத்து. என்ஞ என்று பன்மையாகச் சொன் னது, கோயில் பலவற்றிலும் உள்ள மூர்த்திகளை நினைந்து.

“பாரியைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்களே. வேறு ஒருவரும் உங்களுக்கு அகப்படவில்லையா?” என்று இடைமறித்துக் கேட்டார் கபிலர். அப்படிக் கேட்கும்போது அவருடைய முகத்தில் புன்முறுவல் ஒளிவிட்டது.

“எப்படிப் பேசினாலும் பாரியினிடந்தான் வந்து முடிகிறது” என்று ஒரு புலவர் சொன்னார்.

“பாரி, பாரி என்று எப்பொழுதும் ஒருவனையே புகழ்கிறீர்களே. அதை மாற்றி வேறு யாரைப் பற்றியாவது சொல்லுங்கள்” என்று மறுபடியும் கபிலர் சொன்னார்.

“பாரியைச் சொல்லிவிட்டு வேறு ஒருவரைச் சொல்லுவதாவது!” என்று ஒருவர் கூறினார்.

“நன்றாக யோசித்துப் பாருங்கள். எத்தனையோ வள்ளல்களைக் கண்டு பாடிப் பரிசில் பெற்றவர்கள் நீங்கள். பாரிக்கு ஒப்பாக வேறு யாராவது ஒருவரை எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள். ஒருவர் கூடவா கிடைக்கமாட்டார்?”

கபிலர் இப்படிக் கேட்டதும் புலவர்கள் சிறிது நேரம் யோசிப்பவர்களைப் போல மௌனமாக இருந்தார்கள். பிறகு, “பாரியை விட்டால் வேறு யாரும் இல்லையே!” என்றார்கள்,

“அப்படியா? நான் வேறு ஒருவரைச் சொன்னால் ஒப்புக்கொள்வீர்களா?” என்று கேட்டார் கபிலர்.

“நீங்களா சொல்லப்போகிறீர்கள்!” என்று புலவர்கள் வியப்போடு கேட்டார்கள். கபிலர் பாரியினிடம் எவ்வளவு அன்பும் பெரு மதிப்பும் வைத்திருக்கிறார் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். அதனால் தான் இப்படிக் கேட்டார்கள்.

"ஆம். நான்தான் சொல்லப் போகிறேன். எப்போது பார்த்தாலும் பாரி பாரி என்று பலபடியாகப் புகழ்ந்து ஒருவனையே புகழ்கிறார்கள் செந்நாப் புலவர்கள். பாரி ஒருவன்தானா உலகைக் காப்பாற்றுகிறான்?......." கபிலர் பேச்சை முடிக்கவில்லை. "வேறு யார் இருக்கிறார்கள்? சொல்லுங்கள்" என்று பரபரப்பாகப் புலவர்கள் கேட்டார்கள்.

"பாரிக்கும் அவருக்கும் பெயரில் ஓர் எழுத்துத் தான் வேறுபாடு. உலகு புரப்பதற்கு மாரியும் இருக்கிறதே; அதை மறந்துவிட்டீர்களே. பாரி ஒருவன் மாத்திரம் அல்ல; மாரியும் உலகு புரக்க இருக்கிறதே!"

*பாரி பாரி என்றுபல ஏத்தி*
*ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்;*
*மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே.*

புலவர்கள் கபிலருடைய சதுரப்பாட்டை நினைந்து மகிழ்ந்தார்கள். "எங்களை ஏமாற்றிவிட்டீர்கள். உலகத்தில் உள்ள வள்ளல் யாரையோ சொல்லப் போகிறீர்கள் என்றல்லவா எண்ணினோம்? பாரியின் புகழை நாங்கள் எல்லாம் சொல்வதைவிட நீங்கள் எவ்வளவோ அழகாகச் சொல்லிவிட்டீர்களே!" என்று பாராட்டினார்கள்.

ஆம்; கபிலர் பாரிக்கு ஒப்பு மாரியையன்றி வேறு யாரும் இல்லை என்பதையே சமற்காரமாகச் சொன்னார். புலவருலகம் அவர் பாடிய முறையைக் கண்டு ஆனந்தக் கூத்தாடியது வியப்பாகுமா?

# மணம் மறுத்தல்

பாரிக்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள். அழகிலும் அறிவிலும் சிறந்தவர்களாக இலங்கினர்கள். எப்போதும் புலவர்களினிடையே இருந்து பொழுது போக்கும் தந்தையைப் பெற்றதனுல் அவர்களுக்கு அப்புலவர்களுடைய புலமை நலத்தை உணர்ந்து இன் புறும் வாய்ப்பு இளம்பருவத்திலே உண்டாயிற்று. கபிலர் பாரியோடு வாழத் தொடங்கிய பின்பு அவ்விரு வரும் அவரிடம் தமிழ்ப் பயிற்சி பெற்று வந்தனர். அந்தப் பெரும் புலவரைத் தமிழாசிரியராகப் பெறும் பேறு கிடைத்தபோது அவர்களுக்கு உண்டான தமி ழறிவைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு உணர்ந்தார்கள். கவிதையின்பத்தை நுகரும் ஆற்றல் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்திருந்தது; அது பின்னும் மிகுதியாயிற்று. அவர்களே நல்ல கவிதையை இயற் றும் திறமையையும் அடைந்தார்கள்.

அடக்கமும் அன்பும் அறிவும் அவர்களிடம் நிரம்பி யிருந்தன. பாரியினிடம் வந்த புலவர்கள் அவ்விருவ ருடைய அறிவுத் திறத்தையும் கண்டு பாராட்டினர். நல்ல ஆசிரியர் ஒருவர் அவர்களுக்குக் கிடைத்தது போல வேறு யாருக்கும் கிடைக்கமாட்டார் என்று சொல்லிப் புகழ்ந்தனர். அவ்வப்போது புலவர்கள் அவையில் அவ்விரு பெண்களும் இருந்து தமிழ் நயம் தேர்ந்து இன்புற்ருர்கள்.

பாரியின் மகளிர் அழகிலும் அன்பிலும் சிறந்து விளங்கும் செய்தியும் அவனுடைய புகழோடு தமிழ் நாட்டிற் பரவியது. புலவர்கள் தாம் அறிந்த சிறப்புக் களைத் தம் வாயே முரசாக நாவே குறுந்தடியாகக் கொண்டு அறைந்து பரப்பும் இயல்புடையவர்கள் அல்லவா? அவர்கள் பாரிக்கு எத்தனை சிறப்பு உண்டோ அத்தனையையும் எடுத்துப் பாராட்டித் தமிழுலகில் பரப்பினர். அந்த வகையில் பாரி மகளிரின் பெருமையும் பரவியது.

தமிழ் நாட்டில் இருந்த குறுநில மன்னர்களின் காதில் அங்கவை சங்கவை என்னும் அப் பெண்களின் அறிவாற்றலையும் அழகையும் பற்றிய செய்திகள் விழுந்தன. மணமாகாமல் இருந்த வேளிர் சிலர் அவர்களை மணந்துகொள்ளலாம் என்று விரும்பினர். பின்பு தம்முடைய நிலையையும், பாரியினுடைய நிலையையும் எண்ணித் தமக்குக் கிட்டாப் பொருள் என்று கைவிட்டனர்.

ஆனால் பாரிவேளுக்கு இரு மகளிர் மணம் செய்யும் பருவத்தில் இருக்கிறார்கள் என்ற செய்தி பாண்டியனுக்குத் தெரிந்தபோது, அவர்களை மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்ற நினைவு ஏற்பட்டது. முடியுடை மன்னர்கள் குறுநில மன்னர்களின் பெண்களை மணந்து கொள்வது தமிழ்நாட்டில் வழக்கமாக இருந்தது. புகழினாற் பெரியவனாகிய பாரியின் மகளை மணப்பதால் தனக்கும் புகழ் உண்டாகும் என்று பாண்டிய மன்னன் நினைத்தான். ஆனால் அவன் முன்பே மணம் புரிந்துகொண்டவன். பட்டத்தரசி ஒருத்தி இருந்தாள். ஆனாலும் பல மகளிரை மணந்துகொள்வது மன்னர்களுக்கு வழக்கம்.

அதனால் பாரி மகளிர் இருவரையும் தன்னுடைய அந்தப்புர அணங்கினரோடு சேர்த்துவிடலாம் என்ற விருப்பம் கொண்டான் பாண்டியன்.

அவனுக்குப் பாரி மகளிரிடம் காதல் உண்டாக வில்லை. அவர்களை அவன் பார்த்துப் பழகியதில்லையே! ஆயினும் அவர்களுடைய புகழ் அவனுடைய உள்ளத்தில் ஆர்வத்தை உண்டாக்கியது. அது மட்டும் அன்று. பாரியின் புகழ் மேன்மேலும் ஓங்கி வளர்ந்து வருவதை உணர்ந்தவன் அவன். அதனால் அவன் உள்ளத்தில் பொறாமைகூட முளைத்திருந்தது. இப் போது அவனுடைய உறவு கிடைத்தால் புகழிற் பங்கு பெறலாம் என்று எண்ணினான். கிடைத்தால் பாரி மகளிரை மணப்பது, இல்லையானால் அவனோடு போரிடு வது என்று திட்டமிட்டான்.

பாரிக்கு ஓலை போக்கினான். அவன் மகளிர் இரு வரையும் தனக்கு மணம் புரிவிக்கவேண்டும் என்ற செய்தியை அவ் வோலையில் எழுதியிருந்தான். பாரி அதைப் படித்தான். கபிலரிடம் காட்டினான். தன் மகளிருக்கும் காட்டினான். "பெறுதற்கரிய பேறு இது" என்று வேறு மகளிர் நினைப்பார்கள். பாரி மகளிர் அப்படி நினைக்கவில்லை. "பாண்டியனுடைய அந்தப்புரத்தில் உள்ள மந்தையோடு மந்தையாக வாழும்படி செய்வதற்கு என் அருமைக் கண்மணி களை நான் வளர்க்கவில்லை" என்று பாரி வேள் கூறினான். கபிலர் அவன் கருத்தை ஆதரித்தார். பெண்கள் இருவரும் தம் தந்தையார் கருத்தைத் தெரிந்துகொண்டு களிப்பில் மூழ்கினர். "அரச பதவி யும் படையாற்றலும் உடைய கணவர் எங்களுக்கு வேண்டாம். அன்பும் வீரமும் ஈகைச் சிறப்பும்

உடையவர்களையே எங்கள் தலைவராக நாங்கள் அடைவோம். குடிசையிலே வாழ்ந்தாலும் எங்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் காதல் புரியும் ஆடவருக்கே நாங்கள் மாலையிடுவோம்'' என்றார்கள் அவ்விளம் பெண்கள்.

பாண்டியனிடமிருந்து வந்த தூதுவன் மீண்டு சென்றான்; தன் பெண்களை மணம் புரிந்து அளிக்க மறுத்துவிட்டான் பாரி என்ற செய்தியைப் பாண்டியன் அறிந்தான். பாரி மகளிர் கிடைத்திருந்தால் அவனுக்கு உண்டாகும் மகிழ்ச்சியினும் இரண்டு மடங்கு மகிழ்ச்சி இப்போது உண்டாயிற்று. மகளிரை அளிக்க மறுத்த காரணத்தையே தலைக்கீடாகக் கொண்டு பாரியோடு போர் செய்யலாம் என்ற எண்ணந்தான் அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியை ஊட்டியது. இனிப் பாரியை வளர விடக்கூடாது என்ற தீய எண்ணம் அவன் நெஞ்சிற் குடிகொண்டது.

பாண்டியன் பெண் கேட்டதும் பாரி மறுத்ததுமாகிய செய்தி இரகசியமாக இருக்கவில்லை. அது எங்கும் பரவியது. சேர சோழ மன்னர்களுடைய செவிகளுக்கும் எட்டியது. ''உலகம் புகழும் முடி மன்னனாகிய பாண்டியன் மகளிரைக் கேட்டானென்றால் பெரும் பேறு என்று கருதி உடனே மணம் புரிய முன் வராமல் மறுத்தானே; இது அவனுக்கு உண்டாகியிருக்கும் செருக்கைக் காட்டுகிறது. தனக்கு மிஞ்சினவர் யாரும் இல்லை என்ற செருக்கு அவன் தலையில் ஏறியிருக்கிறது. அவன் தன் நிலையை மறந்துவிட்டான்'' என்று சோழன் சொன்னான். அவனுக்கும் பொறாமை இருந்தது. சேரனும் இப்படியே பாரியை இகழ்ந்தான். முடி மன்னர் மூவ

ருக்குமே பாரியின் புகழ் பரவி வருவதில் அழுக்காறு இருந்தது. அவர்கள் ஒன்றுபடுவது மிகவும் அரிது. ஆயினும் பாரியை ஓங்கவொட்டாமல் தகைய வேண்டும் என்ற எண்ணத்தில் மாத்திரம் அவர்கள் ஒன்று பட்டார்கள். எப்படியாவது அவனோடு போர் செய்து அவன் நாட்டைப் பறிக்க வேண்டும் என்ற புன்மதி அவர்களுக்கு உண்டாகிவிட்டது. காரணம் இன்றிப் போர் செய்வது இயலாது. ஆகையால் ஒரு காரணத்தை ஆராய்ந்தார்கள். பாண்டியன் செய்ததையே தாமும் செய்யலாம் என்று சேரனும் சோழனும் தீர்மானித்தார்கள். பாரியின் பெண்களை மணம் செய்துகொள்ள விரும்பித் தனித்தனியே ஓலை போக்கினார்கள்.

பறம்பு நாடு பாண்டி நாட்டில் இருந்தது. அணிமையில் இருந்த பாண்டியனுக்கே பெண் கொடுக்க விரும்பாத பாரி மற்ற மன்னர்களுக்கா கொடுக்க முன் வருவான்? வந்த தூதுவர்களிடம் அம் மன்னர்களின் முயற்சியை எள்ளிப் பேசி அனுப்பினான் பாரி. அதனால் அவர்களுக்கு அவனிடம் சினம் மூண்டது. சேர சோழ பாண்டியர் மூவரும் பாரியை எதிர்த்துப் போர் செய்வது என்ற முடிவுக்கு வந்தனர். "இந்தச் சிறிய வேளை அடக்க ஒருவருடைய படையின் ஒரு பகுதியே போதும். ஆனாலும் தமிழ் மன்னர் மூவருடைய பகையையும் அவன் பெற்றிருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? மூவருமே சேர்ந்து படையுடன் சென்று பறம்பு மலையை முற்றுகையிட்டு அவன் மிடுக்கைத் தொலைப்போம்'' என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். போர் புரிய ஆயத்தம் செய்தார்கள்.

# முற்றுகை

பறம்பு நாட்டு மக்கள் அனைவரும் பாரிவேளுக்காக உயிரையும் அளிக்கச் சித்தமாயிருந்தனர். பாண்டியனும் பிறரும் பாரியின்மேற் படையெடுக்கப் போகிறார்கள் என்ற செய்தி அவனுக்கு முன்பே எட்டியது. அவனிடம் அன்புடைய மக்கள் தமிழுலகம் முழுவதுமே இருந்தார்கள். அவர்கள் வாயிலாக இந்தச் செய்தி அவனுக்குத் தெரிய வந்தது. பாரி ஈகையிற் சிறந்தவன் என்பதை எந்த அளவுக்கு உலகம் அறிந்துகொண்டதோ, அந்த அளவுக்கு அவன் வீரத்திலும் சிறந்தவன் என்பதை அறிந்துகொள்ளவில்லை. வீரப் பெரு மக்களின் பரம்பரையிற் பிறந்த அவன் குருதியிலே வீரம் கலந்திருந்தது. அவனுடைய நீண்ட கைகளின் பெருமையை ஈகையினுல் உணர்ந்த உலகம், அவனுடைய திண்ணிய தோள்களின் வலிமையை நன்கு உணரவில்லை. இதோ அதை உணரும் வாய்ப்பு உண்டாகியிருக்கிறது. புலவர்கள் அவன் ஈகைத் திறத்தை வெளிப்படுத்தினர். இப்போது முடியுடை மன்னர்கள் அவனுடைய வீரத்தைப் புலப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார்கள்.

பாரி வலியப் போரை விரும்புபவன் அல்லன்; வந்த போருக்கு அஞ்சுபவனும் அல்லன். அவனிடத்திலும் படைகள் இருந்தன. சிறந்த வீரர்கள் இருந்தார்கள். பறம்பு நாட்டுக் குடிமக்களில் கட்டிளங் காளைகள் பலர் இப்போது பாரியோடு நின்று போர் புரிய முன்வந்தனர்.

பறம்பு நாட்டின் எல்லைக்குள் மன்னர்களின் படை நுழையாமல் தடுப்பது எளிதாகத் தோன்ற வில்லை. மூன்று மன்னர்களும் ஒருங்கே கூடிப் படை யெடுத்தால் அவர்களுடைய பெரும்படைக்கு எதிரே நிற்கத் தமிழ் நாட்டில் வேறு படையே இல்லை. ஆயி னும் பறம்பு மலைமீது படை முழுவதும் ஏறிப் போர் செய்வதென்பது இயலாத செயல். ஆதலால் பறம்பு நாட்டைப் பாதுகாப்பதைவிடத் தன் படை முழுவதை யும் பறம்பு மலையின்மேல் கூட்டி வைத்துக்கொண்டு அந்த மலையைப் பாதுகாப்பதுதான் தக்க வழியென்று பாரிவேள் தீர்மானித்தான். கபிலரும் அப்படிச் செய் வதே நலம் என்று கூறினர்.

தன் பலத்தையும் மாற்றான் பலத்தையும் அள விட்டு, எவ்வாறு போர் செய்தால் வெற்றி பெறலாம் என்று சூழ்ந்து புகுதல் மன்னர்களுக்கு நன்மையை உண்டாக்கும். பாரி வேள் நன்றாக ஆராய்ந்தான். அவனுக்கு இருந்த படைப் பலம் முடி மன்னருக்கு எதிரே நின்று வெல்லுவதற்குப் போதும் என்று சொல்ல இயலாது. ஆயினும் அவனுக்கு வாய்த் திருந்த பறம்பு மலை எதற்கும் அஞ்சாத நிலையைத் தந்தது. வெளியிலே நெடுகப் பரந்து கிடக்கும் கடல் நீர்ப் பரப்பு எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அத னிடையே ஒரு கப்பல் மிதந்து உள்ளிருப்போரைக் கொண்டு செல்வதுபோல, எத்தனை படைகள் வந்தா லும் பாரியைப் பாதுகாக்கும் வகையிலே பறம்பு மலை இருந்தது.

மலைமேலுள்ள அரண்களைச் செப்பஞ் செய்தான் பாரி. அங்கங்கே மறைவாக நின்று அம்பு எய்யும் துளைகள் இருந்தன. அவற்றை ஏப்புழைகள்

என்று சொல்வார்கள். அவற்றையும் செப்பனிட்டான். பகைவர் வந்து முற்றுகையிட்டால் படை வீரர்களுக்கு உணவுப் பொருள் வேண்டுமென்று, நெல் முதலியவற்றைக் கொண்டு வந்து மலையின்மேல் சேமித்தான்.

தோள் தினவு கொண்ட வீரர்கள் ஆரவாரம் செய்தார்கள். போர் என்றால் அவர்களுக்கு மகிழ்ச்சி. "இத்தனை காலம் வீணே யிருந்த எங்கள் தோள் வலிமை இப்போதுதான் பயன்படப் போகிறது. எங்கள் பெருந் தலைவனிடம் எங்களுக்குள்ள அன்பைக் காட்டும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது" என்று ஊக்கம் பெற்றார்கள் அவர்கள்.

மூவேந்தர் சேனைகளும் பறம்பு நாட்டின் எல்லையை அடைந்தன. பேருக்கு ஒரு சிறு படை அங்கே நின்று வேந்தர் படையை எதிர்த்தது. சில நாழிகைகளில் அந்த எல்லைப் படை சேர சோழ பாண்டியர்களுக்கு வழி விட்டு விட்டது. அம் மன்னர்களுக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று. 'இவர்களுடைய எதிர்ப்பு எம்மாத்திரம்! இனி நாம் போர் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமலே பாரி நம்மைச் சரணடைவான்' என்றே அவர்கள் எண்ணினார்கள். பறம்பு நாட்டின் எல்லையைக் கடந்து உள்ளே புகுந்தார்கள். அவர்களை யாரும் தடுக்கவில்லை; வரவேற்கவும் இல்லை. பாரி படையுடன் பறம்பு மலையின்மேல் இருக்கிறான் என்று தெரிய வந்தது. படைகள் அம் மலையை நோக்கிச் சென்றன. அதன் அடிவாரத்தை அடைந்தபோது தான் முடி மன்னர்களுக்கு உண்மை புலனாயிற்று. பாரியைப் போர் செய்யாமலே வென்றுவிடலாம் என்று எண்ணியது பேதைமை என்று விளங்கியது.

மலையின்மேல் படை அவ்வளவும் ஏறுவது இய லாது. ஏறுகிற வழிகள் சில இருந்தன. அவற்றில் எல்லாப் படையும் ஏறி மலையின் உச்சியை அடைய முடியாது. மலையடிவாரத்தை அடைந்தவுடன் மேலி ருந்து அம்பு மாரி பெய்யத் தொடங்கியது. கற்களும் பாறைகளும் உருண்டு வந்தன. இயற்கையான அர ணுகப் பாரிக்கு அந்த மலை நிற்பதைக் கண்டு மன்னர் மூவரும் மயங்கினுர்கள்.

அவர்களுடைய படை பெரும் படைதான். ஆனு லும் அந்தப் படையின் பலத்தைச் சிறியதாக்கிக் கொண்டு வானளாவ நிமிர்ந்து நின்றது பறம்புமலை. சில வீரர்கள் மலையின்மேல் ஏறினுர்கள். சிறிது தூரம் ஏறுவதற்குள் அவர்கள் பிணமாகி உருண் டார்கள். கீழிருந்து அம்புகளை எய்தார்கள். அவை பறம்புமலைச் சாரலிலே மறைந்தன. எத்தனை படை இருந்தாலும் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்தது.

வில்லும் வேலும் வாளும் கொண்ட வீரர்கள் மீனினங்களைப் போல் மலையடிவாரத்தில் வட்டமிட் டார்கள். மலையின் மேலுள்ள கோட்டையை அண் ணுந்து பார்த்தார்கள். அம்புகளை எய்தார்கள். எள் ளளவும் பயன் உண்டாகவில்லை.

இந்த நிலையில், என்ன செய்வது என்ற யோசனை பகை மன்னர்களுக்கு உண்டாயிற்று. மூவரும் ஒருங்கு கூடி ஆலோசனை செய்தனர். கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். "நம்முடைய படை களை இந்த மலையைச் சுற்றி நிற்க வைத்து விடுவோம். சில நாட்கள் இந்த முற்றுகை நடைபெறுமானுல் கீழிருந்து எந்தப் பண்டமும் மேலே செல்ல முடியாது. மேலே உள்ளவர்களுக்குக் கீழே இருந்துதானே உண

வுப் பண்டங்கள் போக வேண்டும்? இப்போதைக்குச் சில நாட்களுக்கு வேண்டியவற்றையே அவர்கள் சேமித்து வைத்திருப்பார்கள். நாம் தொடர்ந்து இங்கே முற்றுகையிட்டால் உணவு இல்லாமல் வாடும் நிலை அவர்களுக்கு ஏற்படும். அப்போது வழிக்கு வருவார்கள். சண்டை செய்யாமலே வெற்றி பெறலாம் என்று முதலில் நாம் எண்ணிய எண்ணம் இந்த வகையில் கைகூடிவிடும். மேலே உள்ளவர்களோடு போர் செய்து வெற்றி பெருவிட்டாலும், அவர்களைப் பட்டினி போட்டு வெல்வோம்'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

முடி மன்னர் மூவருடைய படைகளும் பறம்புமலையைச் சுற்றி முற்றுகையிட்டுச் சில நாட்கள் ஆயின. அங்கங்கே படை வீடுகளை அமைத்துக்கொண்டார்கள் படைத் தலைவர்கள். ஒரு நாள் பறம்புமலையின் மேலிருந்து ஓர் ஓலை வந்தது; அம்பிற் கோத்து அந்த ஓலையைக் கீழே இருந்த பகைவர்களுக்கு அனுப்பினான் பாரி. அது படை வீரர்களினிடையே விழுந்தது. அதை உடனே எடுத்துக்கொண்டு மன்னர்களிடம் சென்றார்கள் வீரர்கள்.

ஓலை வந்து விழுந்தது என்ற செய்தியைக் கேட்டவுடனே மன்னர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். தாம் எதிர்பார்த்தபடியே பாரி சரணடைவதற்காக அதை விடுத்திருக்கிறான் என்று எண்ணினார்கள். ''இனிமேல் சமாதானம் செய்துகொள்வதையன்றி வேறு வழியில்லை என்பதைப் பாரி உணர்ந்திருப்பான்'' என்று சோழன் சொன்னான். ''இவ்வளவு நாள் காத்திருந்ததே பெரிது'' என்றான் சேரன். பாண்டியன் ஓலைச் சுருளை விரித்துப் படித்தான்; மனத்துக்குள் படித்துக்

கொண்டான். அதை வாங்கும்போது இருந்த வேகம் இப்போது அவனிடம் இல்லை. அவன் முகத்தில் மலர்ச்சி உண்டாகவில்லை; முன்பே இருந்த ஒளி மங்கியது. "என்ன எழுதியிருக்கிருன்?" என்று மற்றவர்கள் படபடப்பாகக் கேட்டார்கள். பாண்டியன் ஓலைச் சுருளைச் சோழன் கையிலே கொடுத்தான். அவனும் அதில் உள்ளதைப் படித்தான். அவனும் ஒன்றும் பேசவில்லை. சேரனிடம் ஓலையைக் கொடுத்தான். சேரன் அதை வாங்கிப் பார்த்தான். அவனும் வாய் திறவாமல் இருந்தான். அவர்களைச் சுற்றி நின்ற படைத் தலைவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை; அம்மூவருக்கும் வாய்ப் பூட்டுப் போட்ட செய்தி எதுவாக இருக்கும் என்று அவர்கள் மயங்கினுர்கள்.

பாண்டியன் மறுபடியும் ஓலையை வாங்கிப் பார்த்தான்; கூர்ந்து கவனித்தான்.

"இது கபிலர் எழுதிய பாட்டுத்தான்" என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து நழுவின; சூழ நின்ற வீரர்களுக்கு இப்போதும் உண்மை விளங்கவில்லை. "பாட்டா?" என்று தங்களுக்குள் கேட்டுக்கொண்டனர்.

பாண்டியன் ஓலையைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அந்த ஓலையில் கபிலர் எழுதிய பாடல் இருந்தது. அந்தப் பாட்டிலே பாண்டியனது மனம் ஆழ்ந்து போயிற்று. தமிழ் வளர்க்கும் குலத்திற் பிறந்தவன் அல்லவா அவன்? இதுவரையிலும் அவன் பாரியையே நினைத்துக்கொண்டிருந்தான். இப்போது கபிலருடைய நினைவை உண்டாக்கியது அந்தப் பாடல். கபிலரை உசாத் துணைவராகப் பெற்ற பாரியின் பாக்கியத்தை அவன் இப்போது எண்ணிப்

பார்த்தான். பறம்பு மலையின் பெருமையைக் கபிலர் பாடியிருந்தார். 'மதுரைக்குக் கிடைக்காத பேறு இது!' என்று எண்ணும்போது பாண்டியனுக்குச் சற்றே வருத்தம் உண்டாயிற்று. அந்தக் கவியின் சுவையிலே மனத்தைப் பறிகொடுத்திருந்தான்.

சிறிது நேரம் இப்படி இருந்தான்; படை வீரர்கள் அருகில் நிற்பதைக் கண்டு பழைய நிலையைப் பெற்றான். ஓலையை அருகில் நின்ற படைத் தலைவனிடம் கொடுத்தான். அவன் அதைப் படித்துப் பார்த்தான்.

கபிலர் ஒரு பாடலை எழுதியனுப்பியிருந்தார். பாரியை எளிதில் வெல்ல முடியும் என்ற எண்ணம் நிறைவேறாது என்பதை அதன் வாயிலாகப் புலப்படுத்தியிருந்தார். பறம்பு மலையை எவ்வளவு நாள் சூழ்ந்து முற்றுகையிட்டாலும் தங்களுக்கு உணவுப் பஞ்சம் நேராது என்பதைக் காரணங்களுடன் தெரிவித்திருந்தார். "ஐயோ பாவம்! இந்தப் பறம்பு மலையை நினைக்கும்போதே இரக்கம் உண்டாகிறது. இந்த முடியுடை மன்னர் மூவரும் தன் அடிவாரத்தில் வந்து நிற்க அவர்களுக்குச் சிறிதும் இடங் கொடுக்காமல் இப்படி இருக்கிறதே! இது இரக்கப்பட வேண்டியது அல்லவா?" என்று பரிகாசத் தொனியோடு பாட்டை ஆரம்பித்திருந்தார்.

அளிதோ தானே பாரியது பறம்பே!*

என்று அது தொடங்கியது. மேலே, அதனால் தங்களுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளைப் பாட்டிலே சொல்லியிருந்தார்.

---

* பாரியினது பறம்புமலை இரங்கத் தக்கது.

"இத்தனை முரசுகள் சேர்ந்து ஒரே சத்தம் போடுகின்றன, அவற்றையுடைய நீங்கள் மூன்று மன்னர்களும் சேர்ந்து பறம்பு மலையை முற்றுகையிட்டிருக்கிறீர்கள். இப்படியே முற்றுகையிட்டிருந்தால் மேலே உணவுப் பண்டம் வராமல் நாங்கள் யாவரும் பட்டினியால் வாடுவோம் என்று நீங்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன்; கேளுங்கள். இங்கே நாங்கள் எந்த விதமான முயற்சியும் பண்ணுமலே நான்கு வகை உணவுப் பண்டங்கள் கிடைக்கின்றன. உழவர்கள் ஏரைப் பூட்டி உழவேண்டியதில்லை ; பயிர் செய்ய வேண்டிய அவசியம் இல்லை; களை பறிக்கவேண்டியதில்லை. இயற்கையாகவே இந்தப் பறம்பு மலையில் அந்த நான்கும் கிடைக்கின்றன."

*நளிகோள் முரசின் மூவிரும் முற்றினும்*
*உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே!* *

அப்பால் அந்த நான்கும் இன்னவை யென்று சொல்லியிருந்தார்.

"உழவர் உழுது நீர் பாய்ச்சிப் பயிர் பண்ணினல் தான் நெல் கிடைக்கும் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். எங்களுக்கு இங்கே வேறு வகையான நெல் கிடைக்கிறது. அது வயலில் விளைகிறது அன்று. சிறிய இலையையுடைய மூங்கில்கள் இங்கே நிறைய இருக்கின்றன. அவற்றிலே நெல் விளைகிறது. ஆகையால் கீழிருந்துதான் வரவேண்டும் என்பது

* செறிந்த முரசுகளையுடைய நீங்கள் மூன்று பேரும் முற்றுகையிட்டாலும், இந்த மலை உழவர் உழுது பயிர் பண்ணுதனவாகிய நான்கு உணவுப் பண்டங்களை உடையதாக இருக்கிறது.

இல்லை. இரண்டாவது: இங்குள்ள பலா மரங்களில் மிகவும் இனிய சுளைகளையுடைய பழங்கள் கனிந்து பழுத்து உதிர்கின்றன. இந்த இரண்டு மட்டும் அல்ல. படர்ந்து அங்கங்கே ஓடிக் கிடக்கும் வள்ளிக் கொடிகளில் பெரிய பெரிய கிழங்குகள் இருக்கின்றன. அவற்றைச் சுட்டு உண்ணலாம். எங்கே பார்த்தாலும் தேனடைகள் இருக்கின்றன. அவற்றில் தேன் நன்றாக முதிர்ந்து நீல நிறம் பெற்று அருவியாக விழுந்துகொண்டிருக்கிறது. இவற்றை வைத்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் இனிய உணவு உண்டு வாழலாமே!''

ஒன்றே,
சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே;
இரண்டே,
தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே;
மூன்றே,
கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே;
நான்கே,
அணிநிற ஓரி பாய்தலின் மீதுஅழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே.

''இத்தனையும் விளைவதற்கு இடம் எங்கே என்று யோசிக்க வேண்டாம். பாரியின் மலை வானத்தைப் போல விரிந்தது. வானத்தில் மீன்கள் இருப்பது

* ஒன்று: சிறிய இலையையுடைய மூங்கிலில் நெல் விளையும். இரண்டாவது: இனிய சுளைகளையுடைய பலாப் பழம் கனிந்து உதிரும். மூன்றாவது: வளப்பமான கொடியில் வள்ளிக்கிழங்கு பூமிக்கடியில் வளரும். நான்காவது: அழகிய நீலமான ஓரி படர்வதனால் மேலே கனிந்து திண்ணிய உயர்ந்த மலையில் எங்கும் தேன் அருவியாகச் சொரியும். ஓரி-முதிர்வைக் காட்டும் நிறம்.

போல இந்த மலையில் சுனைகள் இருக்கின்றன. அவற்றை எண்ணி இத்தனை என்று வரையறுப்பது இயலாது.

*வான்கண் அற்று அவன் மலையே; வானத்து*
*மீன்கண் அற்று அதன் சுனையே.* *

"இத்தகைய இடத்தில் நீங்கள் பல யானைகளைக் கொண்ட படையோடு வந்திருக்கிறீர்கள். மரத்துக்கு ஒன்றாகக் கட்டும் அளவுக்கு உங்கள் யானைகளைக் கொண்டு வந்தாலும், காணும் இடங்களில் எல்லாம் உங்கள் தேரை நிறுத்தியிருந்தாலும் பாரி உங்களுக்கு வசப்பட மாட்டான். அவன் குன்றத்தை உங்கள் முயற்சியினால் கொள்ள இயலாது. வாளோச்சிப் போர் செய்தாலும் அவன் தரமாட்டான். அதை அடையும் விதம் ஒன்று எனக்குத் தெரியும். தேரையும் களிற்றையும் விட்டுவிட்டு, வில்லையும் வாளையும் எறிந்துவிட்டு, வாரி முறுக்கிய நரம்புக் கட்டையுடைய சிறிய யாழை எடுத்துக் கொள்ளுங்கள். நன்றாகச் சுருதி சேர்த்துக் கொண்டு வாருங்கள். மணம் பொருந்திய கூந்தலையுடைய உங்கள் மனைவி மார் விறலியரைப் போல உங்களைத் தொடர்ந்து வர, நீங்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வந்தால், பாரி உங்கள் ஆடல் பாடலைக் கண்டு மகிழ்ந்து, பறம்பு நாட்டையும் பறம்பு மலையையும் ஒருங்கே தந்து விடுவான். இவ்வளவு எளிய வழியில் பெறும் வகை இருக்க, எதற்காக இப்படியெல்லாம் அல்லற்பட

* வானில் உள்ள இடத்தைப்போல அகன்றது அவன் மலை; அந்த வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போன்றது அங்குள்ள சுனைகளின் தொகுதி.

வேண்டும்?'' என்ற கருத்துப் புலப்படும்படியாகப் பாட்டின் இறுதிப் பகுதி அமைந்திருந்தது.

ஆங்கு

*மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்*
*புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்*
*தாளிற் கொள்ளலிர்; வாளில் தாரலன்;*
*யான்அறி குவன்அது கொள்ளு மாறே;*
*சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி*
*விரைஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர*
*ஆடினிர் பாடினிர் செலினே,*
*நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே.* *

''நீங்கள் வீரத்தால் பாரியை வெல்ல முடியாது. கலைப் பண்பு உங்களிடம் இருந்தால் அவனை அணுக லாம்'' என்ற கருத்தைப் பாட்டு, குறிப்பாக வெளி யிட்டது. எத்தனை நாள் முற்றுகையிட்டாலும் உண வில்லாமல் தவிக்கும் நிலை பறம்பு மலையின் மேல் இருப்பவர்களுக்கு வராது என்ற செய்தியையும் அது தெரிவித்தது.

மூன்று மன்னர்களும் இனி என்ன செய்வது என்று ஆராய்ந்தார்கள். அவர்கள் தங்கள் நகரத்தை விட்டுவிட்டு எத்தனை காலம் பறம்பு மலையின் அடி வாரத்தைக்காத்து நிற்பது? 'மூங்கிலரிசியைச் சமைத்து

---

* *ஆங்கு—அவ்விடத்தில். பிணித்த—கட்டிய. புலம்—இடம். தாளின்-முயற்சியால். கொள்ளலிர்-கைப்பற்றமாட்டீர். தாரலன்—தரமாட்டான். சுகிர்புரி நரம்பின்-சுகிர்ந்து முறுக்கிய நரம்பையுடைய. சீறியாழ்—சிறு யாழ். பண்ணி—நன்கு அமைத்து. விரை—மணத்தையுடைய. ஒலி—தழைத்த. மன்னர்களைப் பாணர் போல வரச் சொன்னமையால் அவர்களின் மனைவிமாரை விறலியர் என்றார்.*

உண்டு எவ்வளவு காலத்துக்கு இருக்கமுடியும்? தேனும் பலாப் பழமும் வள்ளிக் கிழங்கும் இருந்தால் போதுமா? காரமும் புளிப்புமுடைய உணவை உண்டு பழகியவர்களுக்கு இவற்றை உண்டால் ஊக்கம் உண்டாகுமா? சில காலம் வீம்புக்கு இவற்றை உண்டு இருக்கலாம். அப்படி உண்டாலும் உடலுக்கு உரம் வருமா? விற்பிடிக்கும் வீறு வளருமா? இன்னும் சில மாதங்களில் பாரி தானே வழிக்கு வந்துவிடுவான்'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். ஆனால் அதுவரையில் முடி மன்னர் மூவரும் அங்கே இருக்க வேண்டிய அவசியமில்லையென்று நினைத்தார்கள். படைத் தலைவர்களை அங்கே படையுடன் தங்கும்படி விட்டு விட்டு அம் மூவரும் தம் தம் இடங்களுக்குச் சென்றனர்.

# வெற்றி

மூடி மன்னர் மூவருடைய படைகளும் பறம்பு மலையின் அடிவாரத்திலேயே இருந்தன. போர் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல், உண்பதும் உறங்குவதுமே வேலையாகப் படை வீரர்கள் இருந்தார்கள். அந்த வாழ்வு சிறையிலே இருப்பது போன்ற வேதனையை அவர்களுக்கு அளித்தது. "மலையின் மேல் உள்ளவர்களை வெளியில் வராமல் செய்துவிட்டோம் என்று நாம் மகிழ்ச்சி அடைந்தோம். இப்போது நாமும் அவர்களைப்போலவே இருக்கிறோம். வில் இருந்தும் அம்பு எய்யாமல், வாள் இருந்தும் வீசாமல் சோம்பேறி யாகிவிட்டோம். நாம் நினைத்தபடி வேறு இடங்களுக்குப் போக முடியவில்லை. இந்த மலையைக் காத்துக்கொண்டு, கட்டிப் போட்ட மாடுகளைப்போல இங்கே கிடக்க வேண்டியிருக்கிறது" என்று அவர்கள் பொருமினார்கள்.

பறம்பு மலையின்மேல் உள்ளவர்கள் அங்கே கிடைத்த உணவுப் பொருள்களைக் கொண்டு காலந் தள்ளினார்கள். குறிஞ்சி நிலத்தின் பண்பை நன்கு அறிந்த கபிலர் மலைமேல் விளையும் பொருள்களில் எவை எவை நல்லுணவாகப் பயன் படும் என்று தேர்ந்து அவற்றைச் சேமிக்கச் செய்தார். உணவுப் பொருள்களைத் தொகுத்து இறைவன் திருக்கோயிலிலும் பாரியின் அரண்மனையிலும் சேமித்து வைத்து, அவ்வப்போது மக்களுக்கு வழங்கச் செய்தார். எப்போதும் நெல்லஞ்சோற்றை உண்ட மக்களுக்கு

எதைத் தின்றாலும் சோறு தின்றதுபோன்ற திருப்தி உண்டாகவில்லை. பலாப்பழம் அவர்களுக்கு இப் போது சுவையற்றதாகி விட்டது. தேன் தெவிட் டியது. வள்ளிக் கிழங்கு அவர்கள் உள்ளத்தைக் கவர வில்லை.

இந்த நிலையைக் கபிலர் நன்கு உணர்ந்தார். ஒரு நாள் பாரியுடன் தனித்திருந்து பேசிக் கொண்டிருக் கையில், ''நம்முடைய வீரர்களுக்கு நெல்லஞ் சோற் றில் நாட்டம் அதிகமாக இருக்கிறதுபோல் தோன்று கிறது'' என்றார்.

''இருக்கலாம். இருப்பது இயல்புதான். ஆனால் போர்க்களத்தில் சோற்றையா நினைத்துக் கொண் டிருப்பது?'' என்று பாரி கேட்டான்.

''போர்க்களமா? நாம் நம்முடைய இடத்தில் தானே இருக்கிறோம்? நீ உன் அரண்மனையில்தானே வாழ்கிறாய்? நாள்தோறும் போரா நடக்கிறது? ஒரு வேலையும் இல்லாமல் வாளா இருக்கும் வழக்கம் நம் குடி மக்களுக்கு இல்லை. ஆனால், இப்போது இந்த முற்றுகையினால் அப்படி இருக்க வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது.''

''அது உண்மைதான். சும்மா இருப்பதனால் சோற்றின்மேல் ஆசை உண்டாகிறது என்று சொல்ல வருகிறீர்களா?''

''இல்லை, இல்லை. பல காலம் தாம் உண்டு பழகிய உணவில் மக்களுக்கு விருப்பம் உண்டாவது இயற்கை. இங்குள்ளவர்களுக்கு அரிசிச் சோற்றில் ஆசை உண் டானது நியாயந்தான். அந்த ஆசையை நிறை வேற்றுவது நம் கடமை.''

கபிலர் இவ்வாறு கூறியதைக் கேட்டுப் பாரி சற்றே மயங்கினன். "நீங்கள் சொல்லுவது...." என்று தொடங்கி அவன் மேலே சொல்வதற்குள் கபிலரே தொடர்ந்து பேசலானர்.

"அவர்களுக்கு அரிசிச் சோற்றைச் சமைத்து அளிப்பது நம் கடமை. இப்போது எப்படி அரிசி கிடைக்கும் என்ற சந்தேகம் உனக்கு எழக்கூடும். அது கிடைக்கும்படி செய்யலாம் என்று நம்புகிறேன்."

"எப்படிக் கிடைக்கும்?" என்று ஆவலுடன் கேட்டான் பாரி.

"இன்னும் சில நாட்களில் நம்முடைய வீரர் களுக்கு அரிசிச் சோற்றை வழங்க முடியும். பாரீசனுக் கும் நெல்லஞ் சோற்றை நிவேதனம் செய்யலாம்."

கபிலர் உறுதியோடு பேசினர். பேசியபடியே செய்தார்.

கிளிகளுக்கும் குருவிகளுக்கும் ஒவ்வொரு நாளும் தினை முதலியவற்றை வீசுதல் பறம்பு மலையில் வழக்கம் என்பதை முன்பே கண்டோம். அந்தத் தானியங்களைக் கொத்தித் தின்ன வரும் பறவைகள் அங்குள்ள மக்களைக் கண்டு அஞ்சாமல் பழகின. அவற் ேறாடு கபிலர் பின்னும் நெருங்கிப் பழகினர். பறந்து சென்று அடிவாரத்தில் உள்ள வயல்களை அடைந்து, அங்கிருந்து நெற் கதிர்களைப் பறித்து வரும்படியாகப் பழக்கப்படுத்தினர். நூற்றுக்கணக்கான கிளிகளும் குருவிகளும் இந்த வேலையில் ஈடுபட்டன. ஒவ்வொரு நாளும் நெற்கதிர்கள் வந்து குவிந்தன. அவற்றைக் கொண்டு அரிசிச் சோறு சமைத்து இறைவனுக்கு நிவேதனம் செய்து வழிபட்டு வீரர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

தம்முடைய மதித்திறத்தால் இந்த அதிசயமான காரியத்தைச் செய்த கபிலரைப் பாரி வணங்கிப் பாராட்டினன். வீரர்கள் வியந்து வியந்து புகழ்ந்தார்கள். தமக்கு விருப்பமான சோறு கிடைத்த பிறகு அவர்களுக்கு ஒரு குறையும் இல்லை.

ஒரு நாள் பறம்பு மலையின்மேலிருந்து ஒரு சிறிய பொதி அம்பொன்றிலே கோக்கப்பெற்றுக் கீழே வந்து விழுந்தது. பகைவர்களின் படைவீரர்களிடையே அது விழுந்தவுடன் சிலர் அதை எடுத்துப் படைத் தலைவர்களிடம் கொண்டுபோயினர். அது சோற்றுருண்டையாக இருந்தது. "மேலே இந்தச் சோறு எப்படிச் சென்றது? அவர்களுக்கு நெல் ஏது?" என்ற கேள்விகளை அவர்கள் தமக்குள் கேட்டுக்கொண்டார்கள். "சிவபெருமான் பிரசாதம்; நல்ல சம்பா அரிசிச் சாதம்" என்று எழுதிய நறுக்கோலையும் அந்தப் பொதியோடு இருந்தது.

அதைக் கண்டபோது அவர்களுக்கு அதிசயம் தாங்க முடியவில்லை. அடுத்தபடி மற்றோர் அம்பிலே கோத்துச் சில நெற் கதிர்கள் வந்து விழுந்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்கப் படையில் உள்ளவர்களுக்கு ஒரே பிரமிப்பாகப் போய்விட்டது. "மலையின் மேல் வெறும் மூங்கில் நெல்லும் பலாப்பழமும் மட்டும் இருக்கின்றன என்றல்லவா நினைத்தோம்? நெல்கூட இருக்கிறதே! சேமித்துவைத்த நெல்லானல் இத்தனை நாளைக்குப் பின்னும் இருக்குமா ? மலையின்மேல் நெல் விளையுமா?" என்று அவர்கள் எண்ணி எண்ணிப் பார்த்தார்கள். "பாரிக்கு மக்களுடைய துணையைக் காட்டிலும் கடவுளின் துணை நிரம்ப இருக்கிறது.

இல்லையானால், ஒரு சிற்றரசன் முடிமன்னர்களுடைய படைகள் தன் மலையை இவ்வளவு காலம் முற்றுகை யிட்டிருக்க, அசையாமல் நலியாமல் விருந்து சாப்பிட்டுக்கொண்டு மேலே இருக்க முடியுமா? அவனுக்கு எப்படி இத்தகைய நிலை உண்டாயிற்று? இது பெரிய அதிசயம்! அற்புதம்!'' என்று வியந்தார்கள்.

பறம்பின்மேல் உள்ளவர்களுக்கு உணவுப் பஞ்சம் சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை என்ற செய்தியை அங்குள்ள சேனைத் தலைவர்கள் சேர சோழ பாண்டியர்களுக்குத் தெரிவித்தார்கள். ''இங்கே நம்முடைய கற்பனைக்கு எட்டாத அற்புதம் நிகழ்கிறது!'' என்று தூதுவர்கள் வாயிலாக ஓலை போக்கினார்கள். அதைக் கண்டவுடன் அந்த மன்னர்களே வந்துவிட்டார்கள். வந்து செய்தியை உணர்ந்தபோது அவர்களும் வியப்பதையன்றி வேறு என்ன செய்ய முடியும்?

அவர்கள் வந்திருந்தபோது மீண்டும் ஓர் ஓலை வந்து விழுந்தது. வழக்கம்போல அதில் ஒரு பாட்டு இருந்தது. இந்த முறை பெரிய பாடலாக இல்லை; சிறியதாகவே இருந்தது.

''இந்தப் பெரிய பறம்பு மலையைக் கண்டால் இரக்கந்தான் உண்டாகிறது! இது எத்தனை பேரை வேலை வாங்குகிறது! வேலின் பலத்தைக் கொண்டு இதை வெல்லுதல் மன்னர்களால் முடியாத காரியம். கையிலே பறையை எடுத்து அடித்துப் பாடிக்கொண்டு வரும் பெண்ணாக இருந்தால் இதை எளிதிலே பெற்றுக்கொள்ளலாம்'' என்ற செய்தியை அப் பாடல் சொல்லியது.

*அளிதோ தானே பேரிருங் குன்றே!*
*வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;*
*நீலத்து, இணைமலர் புரையும் உண்கண்*
*கிணைமகட்கு எளிதால், பாடினள் வரினே. **

'நீங்கள் ஆண்களாக இருந்து என்ன பயன்? கையில் வேலும் வில்லும் எடுத்துப் போர் செய்து காட்டிய வீரம் என்ன? ஆண் உருவம் தாங்குவதற்கே தகுதியில்லாதவர்கள் நீங்கள்' என்று குறிப்பாக இடித்துக் காட்டுவது போல இருந்தது பாட்டு.

அதைப் பார்த்தபோது மன்னர்களுக்கு மான உணர்ச்சி மிக்கது. ஆனாலும் என்ன செய்வது? பொறியில் அகப்பட்ட எலிபோல் வெல்லவும் முடியாமல், விட்டுச் செல்லவும் முடியாமல் திண்டாடினர்.

மறுபடியும் ஒரு பாட்டு வந்தது. "பெரிய படைகளையுடைய மூன்று மன்னர்களும் கூடிப் போராடினாலும் இந்தப் பறம்பு மலை கைப்பற்றுவதற்கு அரிது. பறம்பு நாட்டில் முந்நூறு ஊர்கள் இருக்கின்றன. அந்த முந்நூறு ஊர்களையும் பரிசிலர்கள் பெற்றார்கள். இப்போது பாரியும் நானும் இருக்கிறோம். எங்களுக்குப் புகலிடமாகப் பறம்பு மலையும் இருக்கிறது. நீங்கள் பாடிக்கொண்டு வந்தால் எங்களையும் பெறலாம்;

---

* மிகப் பெரிய இக் குன்றம் இரங்குவதற்குரியது! இதனை வேலினால் வெல்லுதல் அரசர்களுக்கு அரிது. நீலோற்பலத்தின் இரண்டு மலர்களை ஒத்த மையுண்ட கண்களையுடைய, கிணைப் பறையைக் கொட்டும் பெண் பாடிக்கொண்டு வந்தால் அவளுக்கு இது எளிதிலே கிடைக்கும். அளிது - இரங்கத் தக்கது. வேறல் - வெல்லுதல். நீலம் - குவளைமலர். இணை - இரட்டை. புரையும் - ஒக்கும். உண்கண் - மையுண்ட கண்கள். கிணை - ஒரு பக்கம் அடிக்கும் பறை.

பறம்பையும் பெறலாம்''* என்று அந்தப் பாட்டு மீண்டும் குறிப்பாக அவர்களை இகழ்ந்தது.

அதைக் கண்ட மன்னர்களுக்கு, 'இனி இங்கே இருந்தால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாட்டு வந்துகொண்டே இருக்கும். வில்லம்பு வந்தாலும் தாங்கலாம்; இந்தச் சொல்லம்பு நம்மால் தாங்க ஒண்ணாதது. ஒவ்வொரு கவிதையும் பாரியின் சிறப்பைக் காட்டுவதோடு நம்மை இழித்தும் கூறுகிறது. இப்பாடல்கள் தமிழுலகத்தில் பிற்காலத்திலும் வழங்கி, நமக்கு மாளாப் பழியை உண்டாக்கும். ஆதலின், இப்போதே நாம் நம்முடைய முயற்சியைக் கைவிட்டுச் செல்வது நலம்' என்ற எண்ணமே தோன்றியது. "இவனை வேறு வகையில் வெல்வதற்குரிய சூழ்ச்சியைச் செய்வோம். இப்போதைக்குப் பறம்பு மலையை விட்டு அகலுவோம்'' என்று தீர்மானம் செய்தார்கள்.

இரவோடு இரவாக மூவர் படைகளும் அவ்விடத்தை விட்டு அகன்றன. மறுநாள் கதிரவன் எழுந்தான். தன்னைச் சுற்றியிருந்த பகைப்படையாகிய மாசு தீர்ந்து பறம்பு மலை தன் வளம் குன்றாமல் நிமிர்ந்து நின்றது. பாரி வேள், பறம்பு மலையின் சிறப்பும் கபிலருடைய பாடல்களும் துணை செய்ய, மூவேந்தர் படைகளையும் சலிப்புற்று ஓடச் செய்து வெற்றி பெற்றான்.

---

* *"கடந்தடு தானை மூவிருங் கூடி, உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே, முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு, முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர், யாமும் பாரியும் உளமே, குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே."*

# வஞ்சச் செயல்

பறம்பு மலையை முற்றுகை யிட்டுப் பயனின்றி மீண்டு சென்றாலும், சேர சோழ பாண்டியர்களுக்குப் பகை யுணர்ச்சி மாறவே இல்லை. அடியுண்ட வேங்கை மீட்டும் கறுவுவது போல அவர்கள் சினம் பின்னும் மிகுதியாயிற்று. நேர்மையான வழியில் பாரியை வெல்ல முடியாதென்பதை நன்கு உணர்ந்த அவர்கள், வஞ்சகமான முறையிலாவது அவனை மடக்கிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டனர். 'எவ்வாறு பிறர் அறியாமல் அவனை வெல்வது?' என்ற யோசனையில் ஆழ்ந்தனர். அவர்களுடைய உடம்பு பாரி எய்த அம்பினால் புண்படவில்லை. ஆனாலும் அவர்களுடைய உள்ளங்கள் கபிலர் எய்த பாடல்களால் புண்பட்டிருந்தன. அந்தப் பாட்டுக்கள் அவர்களை எள்ளி நகையாடின. பாடல்களின் ஒவ்வொரு சொல்லும் மன்னர்களின் மானத்தைக் குலைத்தது; வீரத்தை இழிவு செய்தது; உள்ளத்தைத் தொளைத்தது; அவற்றை எண்ண எண்ண அவர்களுடைய கோபக் கனலில் நெய் வார்த்தது போலாயிற்று.

பாடலில் ஒவ்வொன்றும் பெரும் படையைப்போல அவர்கள் உள்ளத்திலே விரிந்து உருவெடுத்து நின்றது; மீட்டும் மீட்டும், 'பாணர்களுக்கும், விறலியர்களுக்கும் எளிய இந்த மலை உங்களுக்கு அரிது' என்று கூறியது அவர்கள் உள்ளத்தை உறுத்தியது. ஆனால் அந்த உறுத்தலிலே அவர்களுக்குரிய வஞ்சக வழியும் புலப்பட்டது.

மூன்று மன்னர்களும் ஒரு நாள் ஒன்றுகூடி, பாரியை வெல்ல வழி என்ன என்று ஆராய்ந்தார்கள். "இனிப் போர் செய்து வெல்வது என்பது நடவாத காரியம். வஞ்சகமாக அவனை வெல்லவோ, கொல்லவோ வழி இருந்தால் மேற்கொள்ளலாம். நாமே செய்யாமல் மறைவாக நின்று கொல்லக்கூடிய யாரை யாவது ஏவி நம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள லாம்" என்று பேசினார்கள்,

"அந்தப் பாடல்களிலே ஒரு வழி குறிப்பாகத் தெரிகிறதே!" என்றான் சோழன்.

"என்ன தெரிகிறது?" என்று மற்ற இருவரும் கேட்டார்கள்.

"பாணரும் விறலியரும் யாதொரு தடையும் இன்றிப் பாரியை அணுகலாம் என்பதைத்தானே அந்தப் பாடல்கள் தெரிவிக்கின்றன? அவனை அணுக முடியாமல் தவிக்கும் நமக்கு ஒரு வழியைச் சொல்லித் தருவதாக இல்லையா அது?" என்று கேட்டான் சோழன்.

"அது எப்படி? 'வீரக் கோலம் வேண்டாம்; பாண ராக வாருங்கள்; பாரியின் புகழைப் பாடுங்கள்' என் றல்லவா நம்மைப் பரிகாசம் பண்ணுகின்றன அந்தப் பாடல்கள்? அவை நமக்குத் திரும்பி வருகிற வழியைக் காட்டினவே யொழிய அவனை வெல்லவா வழி காட்டின?" என்று வினவினான் சேரன்.

"அது உண்மைதான். ஆனாலும் வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல அந்தப் பாட்டின் பொருளைத் துணைக்கொண்டே வெல்ல வழி இருக்கிறது. பாணராக நாமே போகவேண்டும் என்பது என்ன? வஞ்சம் புரியும் முரட்டு ஆள் ஒருவனைப் பாணனாக்கி

அவன் கையில் யாழைக் கொடுத்து, அவன் பின்னே நன்ருகப் பாடும் பெண் ஒருத்தியை விறலியாக அனுப்பினுல் நம் காரியம் எளிதிலே கைகூடும்.''

சேரனுக்கும் பாண்டியனுக்கும் இப்போதுதான் சோழனுடைய கருத்து விளங்கியது.

''யாழ் மீட்டும் கையாலே பாரியைக் கொன்றுவிடலாம் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டான் சேரன்.

''ஆம், ஆம்'' என்ருன் சோழன்.

''பாரியைக் கொல்வதா!'' என்று திடுக்கிட்டான் பாண்டியன்.

''கொல்லாமல் வீட்டுக்கு அழைத்து வந்து விருந்து செய்விப்பதா? பாம்பு எவ்வளவு அழகுள்ளதாக இருந்தாலும் நஞ்சுடையதுதானே?'' என்று சோழன் பாண்டியனை நோக்கிக் கூறினுன்.

''வஞ்சனையால் பாரியைக் கொன்ருல் உலகம் உள்ளளவும் பழி நம்மை விடாதே. இந்தப் பாடல்களைக் கண்டு அஞ்சி வந்தோம் நாம். இப்போது கொலை செய்யும் பழிக்கு ஆளாக முற்படுகிருேமே! அது தக்கதுதானு? யோசித்துப் பாருங்கள்'' என்று வழுதி மெலிந்த குரலில் கூறினுன். தமிழ்ப் புலவர்களுக்குக் கற்பகம் போல விளங்கும் பாரியைக் கொல்ல அவன் மனம் இணங்கவில்லை. அப்படிச் செய்துவிட்டால் உலகம் முழுவதும் ஒரே குரலாக எங்கே சென்ருலும், ''நீ பழிகாரன், நீ கொலைகாரன்!'' என்று பழி கூறுமே என்றெண்ணி அஞ்சினுன்.

பாண்டியனுடைய இரக்கத்தையும் அச்சத்தையும் கண்டு சோழன் நகைத்தான். ''அரசியலில் இத்தகைய செயல்களைச் செய்வது முறைதான். எல்லா

வற்றையும் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செய்துகொண்டிருந்தால் நாம் அரசாள முடியாது. பகைவரை வேரோடு களைந்தெறியாவிட்டால் நமக்கு அமைதியே இராது. எந்த வழியிலாவது பகையை அழித்தல் அரசர்களின் முதற்கடமை. பாரியை ஒழிக்க வழி கண்டு விட்டோம் என்று மகிழ்வதற்கு மாருக நீங்கள் அஞ்சுகிறீர்கள். அவனுடைய காலடியில் விழுந்து கிடப்பதைப் போல அவன் மலையடியில் எத்தனை காலம் நம் படைகள் கிடந்தன! அதை நினைத்துப் பார்த்தீர்களா? நாம் பறம்பை முற்றுகை யிட்டும் பாரியை வெல்ல முடியவில்லை என்ற பழி இப் பொழுதே நம்மைச் சூழ்ந்துதான் இருக்கிறது. இனி நமக்குப் புதியதாகப் பழி வரவேண்டுமா? பழி வராமல் செய்ய வழி உண்டு. நாம் அனுப்பிய ஆள்தான் பாரியைக் கொன்ருன் என்பது மக்களுக்கு எப்படித் தெரியும்? சிறிதும் உண்மையை வெளியிடாமல், உயிர் போனாலும் நம்மைக் காட்டிக் கொடுக்காத ஒற் றர்கள் நம்மிடம் இல்லையா? அவர்கள் மூலமாக நம் காரியத்தைச் சாதித்துக் கொள்வோம்'' என்று தன் திட்டத்தை விளக்கினுன் சோழன். சேரனும் அவ னுடன் சேர்ந்து பாண்டியனுக்கு ஊக்கமூட்டும் வகையில் பேசினுன். இறுதியில் பாண்டியன் இந்தப் பாதகச் செயலுக்கு அரை மனத்தோடு இணங்கினுன்.

*

கபிலர் ஊரில் இல்லை. தம்முடைய நண்பர்களைப் பார்க்கச் சென்றிருந்தார். "இனிமேல் பாரியை யாரும் எதிர்த்துப் போரிட வரமாட்டார்கள்'' என்ற எண்ணத்தினுல் அவர் பாரியைப் பிரிந்து சில நாள் சென்றிருந்தார். சில காலமாக மலையின்மேல்

அடைத்துக் கிடந்தமையால் வீரர்களும் தம் மனம் போன போக்காக விரும்பின இடங்களுக்கெல்லாம் போய் வந்தார்கள்; உண்பன உண்டு, பூசுவன பூசி, உடுப்பன உடுத்து இன்புற்ருர்கள்.

இப்படி இருந்த காலத்தில்தான் மன்னர்கள் ஏவி விட்ட வஞ்சப்பாணர் பாரியை நாடி வந்தனர். யாழிசையாலும் வாய்ப்பாட்டாலும் பாரியை மயக்கினர். சில நாள் அவன் இட்ட விருந்தை அருந்திப் பறம்பு மலையின் மேல் தங்கினர்; மலைவளங் காண வேண்டு மென்று அவனையும் அழைத்துக்கொண்டு சென்றனர். அவனுடன் வந்த மெய் காவலரை ஏதோ ஏவல் சொல்லி அனுப்பிவிட்டனர். பறம்பு மலையின் மேல் மரங்களடர்ந்த சூழலில் தன்னைச் சேர்ந்தவர் யாரும் இல்லாதபோது பாரி, வஞ்சகப் பாண வேடம் புனைந்த பாதகன் ஒருவனது வாளுக்கு இரையாஞன். புலவர் களுக்கு வற்ருது மல்கிய ஊற்று வற்றியது. பொய் யாது பெய்த மேகம் வறண்டது. கற்பக மரத்தை அருமை அறியாத பாவி வெட்டிவிட்டான். காமதேனு வைக் கொன்றுவிட்டான்!

இந்தச் செய்தி பிறருக்குத் தெரிவதற்கு முன்னே அந்த வஞ்சகக் கூட்டத்தார் தம் வேடத்தை மாற்றிக்கொண்டு பறம்பு மலையை விட்டுப் போய் விட்டனர்.

குத்துண்ட பாரி குருதி வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டவர்கள் அலறிஞர்கள். பறம்பு நாடே திரண்டு வந்தது. புலவர்கள் கூடிஞர்கள். கபிலர் இந்தச் செய்தியைக் கேட்டு ஓடி வந்தார். "இந்த நிலையில்

உன்னைக் காண்பதற்கா நான் பிரிந்து சென்றேன்!'' என்று புலம்பினர். ''எந்தப் பாதகனுக்கு உன்னைக் கொல்ல மனம் வந்தது! பறம்பு நாட்டையும் மலையையும் கேட்டாலும் கொடுத்திருப்பாயே! உன் உயிரை வாங்கிவிட்டானே, பாவி! அதனால் அவன் பெற்ற பயன் என்ன?'' என்று அரற்றினர்.

''மதுரையும் சங்கமும் எனக்குக் கசந்து போகும் படியாகச் செய்த உன் அன்பு என்னை இந்த மலைக்கு இழுத்துக்கொண்டு வந்ததே! என் உயிராகவே உன்னை நேசித்தேனே! நான் இறக்க, அப்போது என்னினும் இளையனாகிய நீ புலம்பும் புலம்பலை உலகம் கேட்பது முறையாக இருக்க, நான் உன்னை இழந்து புலம்புவதைக் கேட்க நேர்ந்தது விதி செய்த கொடுமையல்லவா?'' என்று அழுதார். கபிலர் தேம்பித் தேம்பி அழுவது கண்டு அவருக்கும் பாரிக்கும் உள்ள அன்புத் தொடர்பை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.

பறம்பு மலை உயிரை இழந்தது; பறம்பு நாடு தலைவனை இழந்தது; புலவர்கள் தங்கள் அரும்பெறல் புரவலனை இழந்து வாடினர்கள். தமிழுலகமே பாரியின் மறைவுக்கு வருந்தியது. ''இப்படிக் கரவாக அவ் வள்ளலைக் கொல்லவும் ஒருவனுக்கு மனம் வந்ததே! முல்லைக் கொடியின் தளர்ச்சி கண்டு அதைப் போக்கத் தன் தேரையே நிறுத்தி வைத்த கருணையாளனைச் சிறிதும் இரக்கமின்றி வஞ்சகமாகக் கொல்ல எப்படித் தான் மனித உள்ளம் துணிந்ததோ! அத்தகைய வலிய உள்ளம் படைத்தவர்களும் இந்த உலகில் இருக்கிறார்களே! பாரியைக் கொல்லும் கொடுமையையுடைய அவர்களால் உலகத்துக்கு இன்னும் என்ன

என்ன தீங்கு நேருமோ!'' என்று சான்றோர்கள் மனம் கரைந்து உருகிப் போனார்கள்.

கபிலர் மக்களுடைய உள்ளப் போக்கை நன்றாக உணர்ந்தவர். பாணராக வந்தவர்களே இந்தப் பழிச் செயலைச் செய்திருக்கவேண்டும் என்று தெளிந்தார். அந்தப் பாணர்களை ஏவி விட்டவர்கள் பகை மன்னர் களாகவே இருக்கவேண்டும் என்றும் அவர் ஊகித்தார். தாம் அனுப்பிய பாடல்களிலே, பாணருக்கும் விறலிக் கும் பாரி எளியன் என்பதைப் பல முறை சொல்லி யிருந்தது அவர் நினைவுக்கு வந்தது. அவர் இருதயம் சுரீரென்றது. ''ஐயோ! நானே உன்னைக் கொன்று விட்டேனே! என் பாட்டு உன்னைக் கொல்ல வழி காட்டிவிட்டதே! நீ விரும்பிப் பாதுகாத்த தமிழ் உன் னைக் கொன்றுவிட்டதே! என்னுடைய பாட்டால் நீ இன்புற்றதைக் கண்டு மகிழ்ந்தேனே! அதே பாட்டு உன் உயிரை வாங்க வழி காட்டிவிட்டதே! நீ இயலுக் கும் இசைக்கும் கூத்துக்கும் அடிமையாக நின்றது உன் உயிரை வழங்குவதற்கா? தமிழுக்காக, இசைக் காக எதையும் நீ வழங்குவதற்காகவோ உன் உயிரை அளித்தாய்?'' என்று நொந்து நொந்து புலம்பினார். உலகம் முழுவதும் அவருக்குப் பாழாகத் தோன்றியது. வருங்காலம் முழுவதும் வெறுமையாகக் காட்சி அளித் தது. அவருக்குச் சிந்தனையே ஓடவில்லை. துயரக் கடலில் அவர் ஆழ்ந்து கிடந்தார்.

# துயர் வெள்ளம்

கபிலரும் பாரியும் ஈருடலும் ஒருயிருமாக வாழ்ந்தவர்கள். பாரியின் பிரிவினால் கபிலரும் உயிர் நீத்திருப்பார். ஆனாலும் அவர் தம் கடமையை எண்ணி, போகின்ற உயிரைத் தாங்கி நின்றார். பாரியின் மகளிராகிய அங்கவை, சங்கவை என்னும் இருவரையும் அநாதைகளாக விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை. அவர்களைத் தக்க இடத்தில் சேர்த்துவிட்டே தமக்கு முடிவைத் தேடவேண்டும் என்று தீர்மானித்தார் அவர்.

ஒரு நாட்டுக்கு அரசன் மறைந்தால் உடனே பகையரசர்கள் அந் நாட்டைப் பற்றிக்கொள்வார்கள். பறம்பு நாட்டுக்குத் தலைவனாகிய பாரி இறந்து படவே அருகில் உள்ள பகை மன்னர் அந் நாட்டைக் கைப்பற்றத் தொடங்கினர். "இனி இங்கே இருந்தால் பாரியின் மகளிருக்கும் தீங்கு உண்டாகும்" என்று அஞ்சிக் கடவுள் அருளையும் தம் புலமையையும் நம்பிக் கபிலர் புறப்பட்டுவிட்டார்.

ஒரு நாள் இரவு நல்ல நிலா வீசிக்கொண்டிருக்கும் நேரத்தில் அந்த இளம் பெண்களை அழைத்துக் கொண்டு பறம்பு மலையை விட்டுப் புறப்பட்டுப் போகலானார். அத்தனை காலம் தமக்கு இடம் அளித்த அம் மலையைப் பிரிய மனமின்றி மிக்க வருத்தத் தோடே நடந்தார். அந்த இளம் பெண்கள், வள வாழ்க்கையில் இன்புற்றவர்கள்; தமக்கு நேர்ந்த கதியை உணர்ந்து மறுகினார்கள். கபிலர் பற்றுக்

கோடாக இருந்ததனால், "இனி நாம் என் செய்வோம்!" என்ற கவலை மிகுதியாக அவர்களுக்கு உண்டாகவில்லை.

அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். நிலா, பால் போல் வீசியது. மக்கள் கதை பேசியும் விளையாடியும் மகிழ்வதற்குரிய நிலா அது. ஆனால் அவர்களுக்கு அதனால் ஒரு பயனும் இல்லை. பகைவர்களுக்கு அஞ்சி ஓடும்போது அது வழி காட்டும் கை விளக்காக உதவியது; அவ்வளவுதான். பாரி மகளிர் நிலாவைக் கண்டனர். திரும்பிப் பார்த்தனர். பறம்பு மலை நின்றது. அவர்களுக்கு அப்போது பழைய காட்சி ஒன்று நினைவுக்கு வந்தது.

அன்றும் இப்படித்தான் நிலா வீசியது. தம்முடைய தந்தையாகிய பாரியோடு அரண்மனை நிலாமுற்றத்தில் அவ்விரண்டு பெண்களும் அமர்ந்திருந்தார்கள். அங்கிருந்து பார்த்தபோது பறம்பு மலையின் அருவிகளும் காடுகளும் தெரிந்தன. அந்த நிலவில் அவற்றிற்குத் தனி யழகு உண்டாகியிருந்தது. "என்ன அழகான நிலா!" என்று பாரி சொன்னான். "என்ன அழகான குன்று!" என்று அங்கவை சொன்னாள். "நிலாவும் குன்றும் அழகானவைகளே! ஆனால் எல்லாவற்றையும் விடச் சிறந்தவர் எங்கள் தந்தையார்!" என்று கொஞ்சும் மொழியில் கிளிபோலப் பேசினாள் சங்கவை. அதைக் கேட்டுப் புன் முறுவல் பூத்தான் பாரி.

இந்தக் காட்சியை அந்தப் பெண்கள் நினைத்துப் பார்த்தார்கள். அது நிகழ்ந்து சரியாக ஒரு மாதந்தான் ஆயிற்று. அவர்கள் நெஞ்சு வெடித்து விடுவது போலாகிவிட்டது. அன்று இருந்த நிலை என்ன!

இன்று இருக்கும் நிலை என்ன! அவர்கள் உள்ளத்தே துயரம் பொங்கியது; பெருமூச்சு விட்டார்கள்; கண்களில் நீர் தேங்கியது. சிறிது நேரம் கழித்து அந்தக் கண்ணீர் கவிதையாக வழிந்தது.

'அன்று, ஒரு மாதத்துக்கு முன்பு, வெண்ணிலா வீசியபோது, எங்கள் தந்தையார் இருந்தார். எங்கள் குன்றை யாரும் கைப்பற்றவில்லை. இந்த மாதம் இதோ வெண்ணிலா வீசுகிறது. பகையரசர் எம் குன்றத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். எம் தந்தையும் இப்போது இல்லை' என்று அந்தச் சோக கீதம் புறப்பட்டது.

*அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்*
*எந்தையும் உடையேம்; எம்குன் றும் பிறர்கொளார்;*
*இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்*
*வென்றுஎறி முரசின் வேந்தர்எம்*
*குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!**

இந்தப் பாட்டைக் கேட்டார் கபிலர். அந்தப் பெண்களின் இள நெஞ்சிலுள்ள துயரப் பிழம்பை அது உருவாக்கிக் காட்டியது. அவர் தம் துயரத்தை அடக்கிக் கொண்டிருந்தார், இந்தப் பாட்டைக் கேட்ட பிறகு அவரால் அடக்க முடியவில்லை. அது தடை போட்டும் நில்லாமல் பீறிக் கொண்டு புறப்பட்டது.

அவர் தம்முடைய துயரத்தை யாரிடம் சொல்லிக் கொள்வார்? அந்தப் பறம்பு மலையைப் பார்த்தே சொன்னார். "பறம்பு மலையே; உன் மலையைக் கண்டு

---

* *அற்றைத் திங்கள்—அந்த மாதம், எறி—முழங்குகின்ற முரசினையுடைய வேந்தர்.*

எனக்குத் துயரம் பொங்குகிறது. பாரி இருந்த காலத்தில் எவ்வளவு சிறப்பெல்லாம் உன்னிடம் நிகழ்ந்தன! எப்போது பார்த்தாலும் விருந்துணவை உண்டோம். பல வகையான உணவுகளை எப்போதும் சமைத்துக் கொண்டே இருந்தார்கள். நீ எங்களுக்கு விருப்பமுள்ள உறையுளாக இருந்தாய். இப்போது நாங்கள் உன்னை விட்டுப் போகிறோம். பாரி பிரிந்து விட்டான். கண்ணீரும் கம்பலையுமாக, உன்னைப் புகழ்ந்து, இந்த இளம் பெண்களுக்கு ஆதரவான மணாளரைத் தேடிக்கொண்டு போகிறோம்'' என்று அவரும் தம் வருத்தத்தையெல்லாம் கொட்டிப் பாடினார்.*

சிறிது தூரம் சென்ற பிறகு மறுபடியும் நின்று திரும்பிப் பார்த்தார். பறம்பு மலையின் அருவியைப் பார்த்தார். "பாரி இருந்தபோது இந்த அருவி மட்டுமா இருக்கும்? ஒரு பக்கம் அருவி ஓடும்; மற்றொரு பக்கம் பாணருடைய பாத்திரத்தில் நிறைய வார்த்த தெளிந்த கள் வழிந்து ஓடும். இப்போது—?

---

* "மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும், அட்டான்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறு, பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி, நட்டனை மன்னே முன்னே இனியே, பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று, நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச், சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே, கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர், நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே." (புறநானூறு, 113.)

மட்டு - கள். மைவிடை - ஆட்டுக் கிடாய். அட்டு ஆன்று ஆனா - சமைத்து முடிந்தும் முடியாத. துவை-துவையல். பெட்டாங்கு-விரும்பியபடி. பழுனி-நிறைந்து. கை அற்று-செயலிழந்து. பழிச்சி-புகழ்ந்து. சேறும்-செல்வோம். கோலாகத் திரண்ட தொடி. தொடி-வளை. கூந்தற் கிழவர்-கணவர். படர்ந்து-நாடி.

மன்னர்களுக்கெல்லாம் பொல்லாதவனானான் பாரி; ஆனால் எங்களுக்கு எத்தனை இனியவன்! அவன் குன்று இன்று இருக்கும் நிலை என்ன!" என்று இரங்கினார்.

மீண்டும் அம் மூவரும் நடக்கலானார்கள். பல நாள் மூவேந்தர் படையும் முற்றுகையிட்டபோது உழவர் உழாத நான்கு வகை உணவுகளைத் தந்த பறம்பைப் பிரிந்து செல்ல முடியாமல் தியங்கித் தியங்கி நின்றார்கள். மறுபடியும் கபிலர் திரும்பிப் பார்த்தார். இப்போது அவர்கள் நெடுந்தூரம் வந்துவிட்டார்கள். மலை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வந்தது. இன்னும் சிறிது தூரம் போகிற வரைக்கும் அது கண்ணுக்குத் தெரியும். அப்பால் அது மறைந்து போகும். கபிலர் இதை நினைந்தார். 'இந்தக் குன்றம் கண்ணிலிருந்து மறைந்து போகும். ஆனால் இதை மறந்து போக முடியாது' என்று வருந்தினார். "இங்கு நின்று பார்த்தால் தெரிகிறது; இன்னும் சிறிது தூரம் சென்று பார்த்தாலும் தெரியும். அப்புறம்—?" அவர் கலங்கினார்.

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும்; சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற!

என்று பாட்டு வந்தது. குன்றம் புறக் கண்ணுக்கு மறைந்தாலும் அகக் கண்ணில் அவர்கள் கண்ட பழைய காட்சிகள் மறையுமா? பறம்பு மலையில் எங்கே பார்த்தாலும் தேனடைகள் இருந்தன. அவற்றைக் கொண்டு வந்து பிழிந்து கோதைப் போட்டு விடுவார்கள். நிறையக் கரும்புக் கட்டை யானைக்குக் கவளமாகக் கொடுக்கையில் அது அதன் சாற்றையெல்லாம் உறிஞ்சிவிட்டுச் சக்கையைப் போட்டால் எப்படியிருக்

குமோ, அப்படியிருக்கும் அந்தக் கோதுக் குவியல். அதிலிருந்து தேன் கசிந்துகொண்டிருக்கும். பாரியின் அரண்மனை முற்றத்தில் இந்தக் காட்சியைக் கண்டவர் கபிலர். பாரி தன்பால் வந்தவர்களுக்குத் தேரை வழங்குவதையும் கண்டிருக்கிறார். முல்லைக்கொடிக்கே தேரை வழங்கினவன் மற்றவர்களுக்கு வழங்குவது என்ன வியப்பு? இந்தப் பழைய காட்சிகள் அவருடைய அகத்தே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. "இத்தகைய இனிய காட்சிகளைப் பெற்றிருந்த குன்றல்லவா இது?" என்று எண்ணி நெடுமூச் செறிந்தார்.

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும்; சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற!
களிறுமென்று இட்ட கவளம் போல
நறவுப்பிழிந்து இட்ட கோதுடைச் சிதறல்
வார்அசும்பு ஒழுகும் முன்றில்
தேர்வீசு இருக்கை நெடியோன் குன்றே.*

இப்படி அவர் புலம்பிக்கொண்டே சென்றார். பறம்புமலை கண்ணுக்கு மறைந்தது. அவர்களுடைய துயர் கண்டு பொறாதவன்போலச் சந்திரனும் மறைந்தான். இனி இவர்களுக்கு விரிந்த உலகத்தைக் காட்ட வேண்டுமென்று தோன்றியவனைப் போலக் கதிரவன் உதயமானான். பறம்பு நாட்டின் கடைசி எல்லையை அவர்கள் அணுகிக் கொண்டிருந்தார்கள்.

---

*சிறுவரை—சிறிது தூரம். நறவு—தேன். சிதறல்—சக்கை. வார் அசும்பு—கசிந்த தேன் குழம்பு. ஒழுகும்—ஓடும். முன்றில்—முற்றம். முன்றிலையும் இருக்கையையும் உடைய நெடியோன்; என்றது பாரியை. தோன்றும் என்றாலும் இனி மறையும் என்ற குறிப்பை உடையது.

'பறம்பு மலை மறைந்தது. இனிப் பறம்பு நாட்டையும் விட்டுப் போய்விடுவோம்' என்று நினைத்த போதே அந்த நினைவு கபிலர் உள்ளத்தை வாள் போட்டு அறுத்தது. அப்போது அவர்கள் நடந்து சென்ற இடம் வளம் சுருங்கிய இடமாக இருந்தது. ஈச்ச மரங்களையன்றி வேறு நிழல் மரங்கள் இல்லாத இடம் அது. சிறிது தூரத்தில் உப்பு வண்டிகளை ஓட்டிக்கொண்டு சென்றார்கள், உப்பு வாணிகர். வண்டிகள் ஒன்றன் பின் ஒன்று நீண்ட சாரியாகச் சென்று கொண்டிருந்தன.

ஈச்ச மரத்தின் அடியில் ஒரு சிறிய மேடு. ஈந்திலைகள் உதிர்ந்திருந்த மேடு அது. அங்கவையும் சங்கவையும் அந்த மேட்டின் மேல் ஏறித் தூரத்தில் சென்ற உப்பு வண்டிகளைப் பார்த்தார்கள். "அடே அப்பா! எத்தனை வண்டிகள்!" என்று வியந்தார்கள். அவர்கள் முன்பு பாராத காட்சி இது; வறண்ட பாலை நிலத்தில் நிகழ்வது. அவர்கள் அந்த வண்டிகளை, "ஒன்று இரண்டு" என்று எண்ணத் தொடங்கினார்கள்.

அவர்களுடைய வாழ்க்கை பாரியை இழந்தமையால் வறண்ட பாலை ஆகிவிட்டது. இப்போது நிற்கும் இடமும் பாலை நிலம். இந்த நிலையிலும் இளம் பருவத்தின ராகையால் அவர்கள் தம் துன்பத்தை மறந்து விநோதமாக உப்பு வண்டிகளை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்டபோது கபிலருக்குத் துயரம் பொங்கி வந்தது. "ஐயோ! இப்படித்தானே அன்றும் எண்ணினார்கள்!" என்று எண்ணி மனம் சாம்பினார். மூடி மன்னர்கள் பறம்பு மலையை முற்றுகையிட்டிருந்த

போது ஒரு நாள் அம் மலையில் இருந்தபடியே கீழே தெரிந்த குதிரைகளை அந்த இரண்டு பெண்களும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அது இப்போது கபிலரின் நினைவுக்கு வந்தது. "அன்று தங்களுக்குரிய பறம்பு மலையில் நின்று சிறிதும் அச்சமின்றிப் போர்ப் படையில் இருந்த குதிரைகளை எண்ணினவர்கள், இன்று ஈச்ச மரத்தின் இலைகள் குவிந்த இடத்தில் ஏறி உப்பு வண்டிகளை எண்ணும்படி ஆயிற்றே!"* என்று நைந்தார்.

பாலை நிலத்தை அவர்கள் கடந்தார்கள். முல்லை நிலம் வந்தது. அங்கே அரும்புகள் நிறைந்த முல்லைக் கொடியைக் கண்டார் கபிலர். பாரி முல்லைக்குத் தேர் வழங்கியதை அது நினைப்பூட்டியது. நல்ல வளம் நிறைந்த பறம்பு நாட்டிலே காடுகள் அடர்ந்த முல்லை நிலம் அதிகம். மழை உரிய காலத்தில் பெய்தமையால் எங்கும் வளம் குறையாமல் இருந்தது. "எத்தகைய உற்பாதம் தோன்றினும் வயலில் பயிர் நிரம்பி வளரும்; செடிகளில் நிறையப் பூ மலரும்; வீடுகளில் கன்று போட்ட பசு வயிறு நிறையப் புல்லைத் தின்று மகிழும். பாரியின் செங்கோலாட்சியில் சான்றோர் பலர் வாழ்ந்தார்கள். மழையில்லாப் பஞ்சம் என்பதே இங்கு இல்லை. முல்லை நிலத்தில் எங்கே பார்த்தாலும் முல்லைக்கொடி அரும்பு விட்டு அழகாகப் படரும்; இத்தகைய நாடு அல்லவா இது? இதை விட்டுப் போகும்படி விதிசெய்துவிட்டதே!" என்று உருகினார். அந்த உணர்ச்சி கவியாக வெளியாயிற்று.†

---

* புறநானூறு, 116. † புறநானூறு, 118.

பாரி இறந்துவிட்டமையால் பகை மன்னர்கள் அந்த நாட்டைக் கைப்பற்றிக்கொள்வார்கள். தம் மனம் போனபடி அதன் அழகைக் குலைத்துவிடுவார்கள். பகைவர் நாட்டு வயலையும் நீர் நிலைகளையும் ஊரையும் அழிப்பது அக்காலத்தில் மன்னர்களுக்கு வழக்கமாக இருந்தது. "பாரியின் செங்கோல் திறத்தினால் மழை திறம்பாத நாடு இது; இனி என்னாகுமோ!" என்பதை எண்ணும்போது கபிலரது வயிறு குழம்பியது.

அங்கே ஒரு சிறிய ஏரி இருந்தது. சிறிய குவடுகளையும் பெரிய பெரிய பாறைகளையும் கொண்டுவந்து கரைகளை உறுதியாகக் கட்டியிருந்தார்கள். வளைவான கரையின் மேல் அம் மூவரும் நடந்துசென்றார்கள். தெளிந்த நீருடன் விளங்கிய அதைப் பார்த்தபோது கபிலர் உள்ளம் கலங்கியது "பகை மன்னர் இதை உடைத்துவிடுவார்களே!" என்று வருந்தினார்.

*அறையும் பொறையும் மணந்த தலைய*
*எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்*
*தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ!*
*கூர்வேற் குவைஇய மொய்ம்பின்*
*தேர்வண் பாரி தண்பறம்பு நாடே!**

என்ற பாட்டாக அவர் துயரம் உருக் கொண்டது. இப்படியே பறம்பு நாட்டின் பழம்பெருமையை நினைந்

---

* பாறைகளும் குவடுகளும் பொருந்திய இடத்தை உடையதும், அஷ்டமி சந்திரனைப் போன்று வளைந்ததுமாகிய இந்தக் கரையையுடைய தெளிந்த நீரைப்பெற்ற குளம் உடைந்து போகுமே! கூரிய வேலையும் பருத்த தோளையும் பெற்ற பாரியினது குளிர்ச்சியை உடைய பறம்பு நாடு இத்தகைய அலங்கோலத்துக்கு உள்ளாகுமே!

தும், அது இனி அழிந்து போகுமே என்று வருந்தியும் கபிலர் நடந்து சென்றார். தாயும் தந்தையும் அற்ற அங்கவை சங்கவை என்னும் இரண்டு பெண் கொடிகளுக்குப் பற்றுக் கோடாக யாரையேனும் கண்டு ஒப்பிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அவர்களை அழைத்துக்கொண்டு அவர் சென்றார்.

# மண முயற்சி

பறம்பு நாட்டை விட்டுப் பாதுகாப்பான இடத்திற்குப் பாரி மகளிரை அழைத்துச் சென்றார் கபிலர். அவருக்கு இப்போது ஒரே ஒரு கடமைதான் முன் நின்றது. அந்த இரண்டு பெண்களையும் தக்க கணவருக்கு மணம் செய்துகொடுத்து விட்டால் அப்பால் இவ் வுலகில் வாழ வேண்டிய அவசியம் அவருக்கு இராது. பாரி இல்லாத உலகத்தில் வாழ அவர் விரும்பவில்லை. ஆகவே, யாருக்கு அப் பெண்களை மணம் செய்து கொடுப்பது என்ற ஆராய்ச்சியே அவருக்குப் பெரிதாயிற்று

தமக்குத் தெரிந்தவர்களைப் பற்றி யெல்லாம் நினைந்து பார்த்தார். அறிந்தாரிடமும் கேட்டுத் தெரிந்துகொண்டார். விச்சி என்ற மலைக்குத் தலைவனாக இருந்த விச்சிக்கோன் என்னும் சிற்றரசனைப் பற்றிக் கேள்வியுற்றார். விச்சி மலை நல்ல வளமுடையது என்பதை அவர் முன்பே அறிவார். ஆதலின் அவனை அணுக எண்ணினார்.

பாரியின் மகளிரை அழைத்துக் கொண்டு விச்சி மலைக்குச் சென்றார். பலமுறை வேண்டிய பின்னர் வருவதற்குரிய அந்தப் பெரும் புலவர் தன்னை நாடி வந்ததனை அறிந்து விச்சிக்கோன் வியந்தான்; அன்புடன் வரவேற்றான்; பாரி வேளை வஞ்சனையால் யாரோ கொன்றனர் என்ற செய்தியை அவன் அறிந்திருந்தான். கபிலரைக் கண்டு வணங்கி, இருக்கச் செய்தான். அவருடன் வந்திருந்த பெண்களைப் பார்த்

தான். அப்போது தாம் வந்த காரியத்தைக் கபிலரே சொல்லத் தொடங்கினர். பெரும் புலவராதலின் தம் கருத்தைப் பாட்டாகவே சொல்லலானர். விச்சிக் கோவின் மலைவளத்தை முதலில் எடுத்துரைத்தார்.

"நின் மலையில் குளிர்ந்த சாரலில் பலாமரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. பச்சைப் பசேலென்று தழைத்த இலைகளும், கண்டால் நாவில் நீர் ஊறச் செய்யும் கனிகளும் அவற்றில் நிறைந்துள்ளன. பலாப் பழத்தை அங்குள்ள ஆண் குரங்கு பறித்து உண்டு அதன் சுவையை உணர்கிறது, உடனே தன் மனைவியாகிய மந்திக்கும் கொண்டு போய் அதனை அளித்து உண்ணச் செய்து மகிழ்கிறது. அப்பால் மலையின் உச்சிக்குப் போய் அங்கே உள்ளே மூங்கிலில் அவ்விரண்டும் துயில்கின்றன. இத்தகைய காட்சிக்கு இடமான மலையை உடையவனே!"

*பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்*
*கனிகவர்ந்து உண்ட கருவிரற் கடுவன்*
*செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி*
*மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்*
*கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!**

பிறகு அவனுடைய வேலையும் யானையையும் அணிகலனையும் பாராட்டினர்.

---

* பனிவரை—குளிர்ந்தமலைப்பக்கம். நிவந்த—உயர்ந்து வளர்ந்த. பாசிலை—பச்சை இலைகள். கடுவன்—ஆண் குரங்கு. மந்தி—பெண் குரங்கு. சேண்—மேலே. மழை மிசை அறியா—மேகமும் உயரத்தை அறியாத. மால் வரை அடுக்கம்—பெரிய மலைத்தொடர். கழை—மூங்கில். கல்லக வெற்ப—கற்களையுடைய மலைக்குத் தலைவனே!

"பகைவருடைய உடலின் நிணத்தைத் தின்று களித்த, நெருப்புப் போலப் பளபளக்கும் இலையை யுடைய நெடிய வேலையும், போர்க்களத்தைத் தன் ஆற்றலால் தன்னுடையதாக்கிக் கொண்டு சீறும், எதற்கும் அஞ்சாத கடுமையையுடைய யானையையும், ஒளி விடும் மணிகளைப் பதித்துச் செய்த வளைந்த அணிகலன்களையும் பெற்ற விச்சிக் கோவே!"

*நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்,*
*களங்கொண்டு கனலும் கடுங்கண் யானை,*
*விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே!**

பின்பு, பாரி மகளிரை இன்னாரென்று கூறினார்.

"இவர்கள் யார் தெரியுமா? எப்போதும் அலங் கரித்து வைத்தாற்போல மலர்களைப் பெற்று விளங் கும் முல்லைக் கொடியானது, புலவர்களைப் போல நாவில் தழும்பு உண்டாகும்படி பாடாவிட்டாலும், அதன் தளர்ந்த நிலையை நோக்கி, ஒலிக்கும் மணியையுடைய என் தேரை இது கொழு கொம் பாகக் கொள்ளட்டும் என்று கொடுத்தவன், பரவிய புகழையுடையவனாகிய பாரி. அவனுடைய மகளிர் இவர்கள்."

*இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும்ப இருப்பப் பாடா தாயினும்*

---

*செருக்கிய—களித்த. தலையென்றது வேலின் இலையை. களம் வென்றவருக்கு உரியதாதலின், களங் கொண்டு என்பது வெற்றியைக்குறித்தது. கனலும்—கோபங்கொள்ளும். கடுங்கண்—எதற்கும் அஞ்சாத தன்மை. கொடும்பூண்—வளைவான அணிகள்.

*கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த*
*பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர். **

பிறகு தாம் வந்த காரியத்தைத் தெரிவித்துப் பாட்டை முடித்தார். "சினத்தாற் செய்யும் போரில் அடங்காத பகை மன்னரை அடக்கும் ஆற்றலேயும் என்றும் குறையாத விளைவையுடைய நாட்டையும் உடையவனே! நான் இப்போது பரிசிலனுக வந்திருக்கிறேன்! ஆதலின் கேட்டதைக் கொடுக்க வேண்டும். நான் அந்தணன்; இந்தக் காரியத்துக்குத் தூது வரும் தகுதி உடையவன். நீயோ யார் யாரை எப்படி வணங்கச் செய்ய வேண்டுமோ அப்படி அடக்கும் வாள் வீரன்; ஆதலின், இப் பெண்களுக்கு ஏற்ற கணவன். உனக்கு நான் இவரை மணம் செய்து கொடுக்க எண்ணுகிறேன். நீ கொள்வாயாக!"

*யானே, பரிசிலன்; மன்னும் அந்தணன்; நீயே*
*வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்;*
*நினக்கியான் கொடுப்பக் கொண்மதி; சினப்போர்*
*அடங்கா மன்னரை அடக்கும்*
*மடங்கா விளையுள் நாடுகிழ வோயே. †*

---

* பூவானது தலையில் என்றும் அறுத. புனை கொடி - அலங்கரித்தாற் போன்ற கொடி. கறங்கும் - ஒலிக்கும். நெடுந் தேர் - உயரமான தேர். கொள்க எனக் கொடுத்த.

† பரிசிலன் - பரிசில் பெறும் புலவன். வரிசையில் வணக்கும் - பகைவரை அவரவர் திறத்துக்கேற்பப் போர் செய்து வணங்கச் செய்யும். வாள் மேம்படுநன் - வாட் போரில் சிறந்து நிற்பவன். கொண்மதி - கொள்வாயாக. மடங்கா - குறையாத. விளையுள் - விளைவு. கிழவோயே- உரியவனே.

கபிலர் இதைக் கூறியவுடன் விச்சிக்கோன், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லவில்லை. சற்றே யோசித்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்று கேட்டார் கபிலர்.

மூவேந்தரும் பாரி மகளிரை விரும்பிப் போர் செய்ததை அவன் அறிந்தவன். அவரைத் தான் மணந்து கொண்டால் அந்த மன்னர்களின் பகை தனக்கு நேருமோ என்று அவன் அஞ்சினான். அதனால் தன் வாயிலைத் தேடி வந்தும் திருமகளைப் போன்ற அந்த அழகிகளை மணக்கும் துணிவு அவனுக்கு உண்டாகவில்லை. தன் கருத்தைக் குறிப்பாகக் கபிலருக்குத் தெரிவித்தான். காதல் செய்து மணம்புரிய வேண்டிய அக் கன்னியரை வற்புறுத்தி ஒருவனுக்கு அளிக்கக் கபிலருக்கு மனம் இல்லை. மேல் ஒன்றும் பேசாமல் அவர் பாரி மகளிரையும் அழைத்துக்கொண்டு விச்சிக் கோனிடம் விடை பெற்றுப் புறப்பட்டுவிட்டார்.

மூவேந்தர்கள் பாரியினிடம் தூது விட்டு மணக்க விரும்பிய பெண்கள் அவர்கள். அறிவிலும் பண்பிலும் மிக மிகச் சிறந்தவர்கள். அவர்களை முடி மன்னர்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்று மறுத்தான் பாரி. இப்போதோ, கபிலர் தாமாக ஒருவனை நாடிச் சென்று, "இவர்களை மணந்து கொள்" என்று சொன்னார். அவன் மாட்டேன் என்கிறான். விதியின் விளையாட்டை என்னவென்று சொல்வது! தமிழுலகம் போற்றும் கபிலர் விருப்பத்தை அறிந்தும் மறுக்கத் துணிந்தான் விச்சிக்கோன். இதைவிட அப் புலவர் பெருமானுக்கு வருத்தத்தைத் தருவது வேறு என்ன வேண்டும்? உலகம் பொல்லாதது. இதில் இனி நாம்

மானத்துடன் வாழ முடியாது' என்ற எண்ணமே அவருள்ளத்தில் மேலோங்கி நின்றது.

மறுபடியும் யாரை நாடுவது?—இதுவே கபில ருடைய கவலையாகிவிட்டது. பெண்ணைப் பெற்ற தந்தைக்குக்கூட இல்லாத கடமையுணர்ச்சியும் ஏக்க மும் அவரிடம் குடிகொண்டன. ஹொய்சள வம்சத் தில் பிறந்தவனும், வேள் எவ்வி என்ற வள்ளலின் வழி வந்தவனுமாகிய இருங்கோவேள் என்ற குறுநில மன்னன் மணமாகாதவன் என்று தெரியவந்தது. அவனை அணுகித் தம் கருத்தை அறிவித்துப் பாரி மகளிரை இல்வாழ்க்கையில் புகுத்தலாம் என்று எண்ணிப் புறப்பட்டார்.

இருங்கோவேள் அரையம் என்னும் மலையை நடுவிலே கொண்ட நாட்டை யுடையவன். பாரி மகளிரையும் அழைத்துக்கொண்டு கபிலர் அவன் இருக்கும் இடத்தை அடைந்தார். "இவர்கள் தன்னு டைய நாட்டு ஊர்களையெல்லாம் புலவருக்கும் பாண ருக்கும் அளித்துத் தேரை முல்லைக்கு அளித்த பாரி வேளின் மகளிர். யான் இவர்களின் தந்தைக்குத் தோழன். இவர்களை என் மகளிராகவே ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தணப் புலவனாகிய யான் இவர்களுக்குரிய மணாளனைத் தேடி வந்திருக்கிறேன். துவார சமுத்திரத்தை ஆண்ட மன்னர் வழி வந்தவன் நீ. வேளிர்களுக்குள் சிறந்த வேள். யான் இவர்களை மணம் புரிந்து தருகிறேன். இவர்களை நீ உன் மனைவி யராக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று அவனிடம் சொன்னார்.

அவன் அவர் சொன்னதைப் பணிவாகக் கேட்க வில்லை. அவர்கள் கிடைத்தற்கு அரியவர்கள் என்பதை

எண்ணவில்லை. "எங்கோ பிறந்து வளர்ந்த பெண்களை ஒரு தொடர்பும் இல்லாத நீர் கொணர்ந்து தர நான் மணம் செய்துகொள்வதாவது!" என்று இழிவுக் குறிப்புத் தோன்றப் பேசினன்.

யாருடைய வாயிலுக்கும் சென்று எனக்கு இன்னது வேண்டும் என்று கேட்டறியாத கபிலர், அங்கே வாய் திறந்து தம் விருப்பத்தைச் சொல்லியும் இருங்கோவேள் கேட்கவில்லை. விச்சிக்கோன் அந்தப் பெண்களை மணக்க மறுத்தபோதே அவருக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. அவன் தக்க காரணத்தைக் கூறினன். இங்கே, இருங்கோவேளோ எடுப்பாகப் பேசினன். 'இவனைக் குறைகூறிப் பயன் இல்லை. நாம் வலிய வந்தது பிழை' என்று தம்மைத் தாமே அப் புலவர் பெருமான் நொந்துகொண்டார். பாரியைப் பிரிந்து இடிந்துபோன அவர் நெஞ்சம் இப்போது சிதறியது; கோபமும் மூண்டது. "புலவர்களைப் புறக்கணிப்பதனல் என்ன கேடு உண்டாகும் என்பதை நீ உணரவில்லை. உன்னுடைய குலத்தில் முன்பு ஒருவன் கழாத்தலையார் என்ற புலவரை இகழ்ந்தான். அதனல் அவன் மங்கி மாய்ந்தான். அவனுடைய அரையம் என்ற நகரும் அழிந்தது. உங்கள் குலத்தில் அப்படி ஒருவன் இருந்ததை நினைக்காமல், எவ்வி என்பவன் பிறந்த குலமாயிற்றே என்று எண்ணி வந்தேன். நான் தெரியாமல் வந்து விட்டேன். நான் சொன்னவற்றைப் பொறுத்துக் கொள். இதோ புறப்படுகிறேன். உன் வேல் வெல்லட்டும்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

# கபிலர் மறைவு

கபிலருக்கு உலகத்தைக் காணக் காண வெறுப்பு உண்டாயிற்று. இரண்டிடங்களில் முயன்றும் பாரி மகளிரைக் கொள்ள யாரும் முன் வரவில்லை. 'இப் படியே ஒவ்வொருவரிடமாகப் போய்க் கொண்டே இருப்பதா? அதைக் காட்டிலும் மானக்கேடான செயல் வேறு இல்லை. நம்முடைய மதிப்புக் குறைந்து விட்டதா? அல்லது இந்தப் பெண்களின் அழகுதான் குறைந்து போயிற்ரு? பாரி இருந்தால் இவர்களுக்கு எத்தகைய சிறந்த கணவர்கள் வாய்ப்பார்கள்! விலை போகாத பண்டத்தை வீடுதோறும் கொண்டு போய், ''நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள்; நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கெஞ்சுவதுபோல அல்லவா ஆகிவிட்டது என் பிழைப்பு? சீ! இனி இப்படிச் செய்யக்கூடாது. இவர்கள் தலைவிதியின்படி எல்லாம் நடைபெறும். இவர்களுக்கு ஏற்ற கணவரைத் தேடி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன் என்று துணிந்தது பெரிய பேதைமையன்ரே? எல்லாவற்றையும் கூட்டுவிக்கும் இறைவன் திருவருள் சுரந்தாலன்றி, எத்தனை முயன்ருலும் நாம் எண்ணியது நிறைவேருது என்பதை எவ்வளவு தெளிவாகக் காண்கிறேன்! இனி இந்தப் பாரத்தை இறக்கிவிட வேண்டியதுதான்' என்று கபிலர் சிந்திக்கலானுர்.

'இவர்களுக்கு மணம் புரிந்து பார்க்க இயலாவிட்டாலும் எங்காவது தக்காரிடத்தில் அடைக்கலமாக ஒப்பித்துவிட்டு நாம் இந்த உலக வாழ்க்கையை

நீக்க வேண்டும்' என்று எண்ணினர். அப்போது அவர் திருக்கோவலூரை அடுத்த ஓர் ஊரில் வந்து தங்கினர். அங்குள்ள அந்தணர்களின் உபசாரத்தைப் பெற்றுச் சில நாட்கள் இருந்தார். அப்போதுதான் இத்தகைய சிந்தனையில் ஆழ்ந்தார்.

பாரி மகளிரைக் காணும்போதெல்லாம் கபிலர் மனம் உளைந்தது. மிக்க வருத்தம் இன்றி எளிதிலே அவர்களுடைய திருமணத்தை முடித்து விடலாம் என்ற எண்ணம், பறம்பு மலையை விட்டு வந்தபோது அவருக்கு இருந்தது. இந்தச் சில நாட்களுக்குள்ளே அந்த எண்ணம் பொடிப் பொடியாகி அழிந்தது. மனம் புண்ணாகி விட்டது. ஒருகால் அவர் உலகத்தை வைதார்; மற்றொருகால் தம்முடைய ஊழ்வினையை நொந்து கொண்டார்; பின்னும் ஒருகால் பாரி மகளிரின் விதியைக் குறை கூறினர். எதைக் குறை கூறி என்ன பயன்? 'இனி என்ன செய்வது?' என்ற கேள்வியே அவர் முன்னே நின்று அச்சுறுத்தியது. தம்மைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. அந்த இரண்டு பெண்களையும் யாரிடம் விடுவது என்பது பற்றியே அவர் கவலையுற்றார்.

அவர் தங்கியிருந்த இடத்தில் வாழ்ந்த அந்தணர் மிகவும் அன்போடு அவர்களை உபசரித்தார். சிறந்த ஒழுக்கமும் அன்பும் உடையவர் அவ்வந்தணர். முதுமைப் பருவத்தினர். 'இவரிடமே அடைக்கலமாக விட்டுவிட்டுச் செல்லலாம்' என்று தோன்றியது கபிலருக்கு. "பெருமானே, இந்த இளம் பெண்களைத் தங்கள் பாதுகாப்பில் விட்டுச் செல்லலாம் என்று நினைக்கிறேன். யாத்திரை செய்யவேண்டும் என்ற விருப்பம் நெடு நாட்களாக எனக்கு உண்டு.

தங்கள் உதவி இருந்தால் அது நிறைவேறும். இந்தக் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமே என்ற கவலை யால் என் விருப்பத்தை இதுவரையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாமற் போயிற்று. நான் யாத்திரையி லிருந்து மீள்வேன் என்ற உறுதி இல்லை. இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பைத் தங்களிடமே விடுகிறேன். இவர்களுக்கு ஏற்ற கணவன்மார் கிடைப்பார்களானால் தாங்களே இவர்களுக்குத் தந்தையாக இருந்து திருமணம் செய்து கொடுங்கள். உயர் குலத்திற் பிறந்த இந்தப் பெண்கள் விதியின் கொடுமையால் இப்படி வர நேர்ந்துவிட்டது. எனக்கு ஏதேனும் கிடைக்குமானால் கொண்டு வந்து தருகிறேன்; திருமணத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்; இல்லையானால் கடவுள் விட்ட வழி ஆகட்டும்'' என்று மிக்க பணிவுடன் கபிலர் அந்த அந்தணரிடம் வேண்டினார்.

அவர் அதற்கு இணங்கினார். 'நமக்கு இருக்கும் பொல்லாத வேளையில் இதுவாவது நல்லதாக முடிந் ததே!' என்று ஆறுதல் பெற்றார் புலவர் பிரான். பாரி மகளிருக்கும் ஆறுதலான வார்த்தைகளைக் கூறிவிட்டு அவர் புறப்பட்டார்.

'பாரிக்குப் பின் உலகில் நல்லவர்களே இல்லை போல் இருக்கிறது!' என்று எண்ணியிருந்த அவருக்குச் சேர அரசன் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஈகையிற் சிறந்தவனாக இருக்கிறான் என்று யாரோ சொன்னது காதில் விழுந்தது. 'அப்படியானால் அவனைப் பார்த்து விட்டு வருவோம்' என்று சேர நாட்டுக்குச் சென்றார். வஞ்சிமா நகரத்தை அடைந்தார். அப்போது அங்கே அரசாண்டிருந்த செல்வக் கடுங்கோ வாழியாதன்

உண்மையிலே பரிசிலரைத் தாங்கும் பண்புடையவ ளுக இருந்தான். பறம்பை முற்றுகையிட்டவன் சேரர் குலத்தில் வேருெரு கிளையில் தோன்றிய மன்னன். வாழியாதனே அவனைப் போலன்றி நேர்மையும் ஈகை யும் உடையவளுக விளங்கினுன்.

கபிலர் தன்னை நாடி வந்திருப்பது தெரிந்து அவன் அவரை எதிர்கொண்டு அழைத்துச் சென் ருன்; பலவகையாக உபசரித்தான். அப்போது கபிலர், "நான் இங்கே எதையும் இரந்து கேட்கும்பொருட்டு வரவில்லை. எதையும் மிகைப்படுத்திக் கூற மாட்டேன். பாரியை இழந்த பிறகு அவனைப்போல யாரும் இல்லை என்று எண்ணியிருந்தேன். நீ சிறந்த கொடை வள்ளலாக விளங்குகிருய் என்று கேள்வியுற் றேன். உன்னைப் பார்த்துச் செல்லலாம் என்று வந்தேன்" என்ருர்.

"எந்தக் கருத்தோடு வந்தாலும், நீங்கள் என்னை யும் பொருட்படுத்தி வந்தது கிடைத்தற்கரிய பேறென்றே கருதுகிறேன்" என்று சேரமான் அன்பு ததும்பக் கூறினுன்.

கபிலர் வஞ்சிமா நகரில் சில காலம் தங்கியிருந் தார். சேரமானுடைய சிறந்த பண்புகளைக் கண்டு மகிழ்ந்தார். அவன்மீது பத்துப் பாடல்களைப் பாடினுர்.* பின்பு, அம் மன்னனிடம் விடை பெற்றபோது அவன் பொன்னும் பொருளும் தந்ததோடு பல ஊர்கள் அடங்கிய ஒரு நாட்டையே அளித்தான். அவற்றைப் பெற்றுக் கொண்ட கபிலர் நேரே பாரிமகளிர் வாழும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். தாம் பெற்ற

* இப் பாடல்கள் பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாக அமைந்திருக்கின்றன.

பொன்னையும் பிறவற்றையும் அவர்களைப் பாதுகாத்த அந்தணரிடம் ஈந்து, "இறைவன் திருவருளைத் துணைக்கொண்டு இவர்களுக்குத் தக்க இடத்தில் மணம் முடித்து வைத்துவிடுங்கள். நான் போய் வருகிறேன். இனி என்னைக் காண முடியாது" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டார்.

உலக வாழ்வு அவருக்கு வெறுத்துப் போயிற்று. பாரியோடு மறு உலகத்தில் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் வலியுற்றது. 'இனி நம்மால் உலகத்தில் ஆகவேண்டிய செயல் ஒன்றும் இல்லை. நாம் பாடிய பாடல்களிலே பாரியும் வாழ்வான்; நாமும் வாழ்வோம். இனி விரதம் இருந்து உயிரை விடுவதே தக்க செயல்' என்று எண்ணினார்.

பாரியை நினைத்தபோதெல்லாம் அவருக்குத் துயரம் உண்டாயிற்று. "குரங்குகள் கீறி உண்ட பழம் நன்றாகக் கனிந்திருப்பது கண்டு, குறவர்கள் அதைப் பறித்து வீட்டுக்குக் கொண்டு வந்து பல நாட்களுக்கு வைத்துக்கொண்டு உண்ணுவார்கள், உன்னுடைய நாட்டில். அத்தகைய வளமான நாட்டை யுடைய பாரியே, நீ என்னோடு மனம் ஒன்றிய நண்பன் என்று நினைத்தேன். ஆனால் அந்த நட்புக்கு ஏற்றபடி நீ நடந்து கொள்ளவில்லை. நீ என்னைப் பாதுகாத்த காலமெல்லாம் உன் மனத்துக்குள் என்னைப்பற்றிய வெறுப்பு இருந்திருக்கவேண்டும். உன்னுடைய பெருமைக்கு ஏற்றவனாக நான் இருக்க வில்லை. அதனால்தான் நீ என்னை இங்கே விட்டுவிட்டுப் போய்விட்டாய். உன்னோடு கூட்டிப் போகாமல், இங்கேயே கிட என்று நீ மறைந்தாய். நான் உனக்கு ஏற்ற நண்பன் அல்லாவிட்டாலும், நல்வினையானது

சில காலமேனும் உன்னோடு ஒருங்கு வாழும்படி செய்தது. எனக்குத் தகுதி யில்லாமல் இருந்தாலும் உன்னோடு இம்மையிலே என்னைக் கூட்டிவைத்த அந்த நல்லூழ் இப்போதும் என்னை உன்னோடு சேரும்படி செய்யட்டும். நான் இனி உன்னைப் பிரிந்து வாழமாட்டேன்!'' என்று அவர் சொல்லிக் கொண்டார். உணர்ச்சியோடு வந்த அந்த வார்த்தைகள் கவியாகவே அமைந்தன.

*இனையை யாதலின் நினக்கு மற்றியான்*
*மேயினேன் அன்மை யானே ஆயினும்*
*இம்மை போலக் காட்டி உம்மை*
*இடையில் காட்சி நின்னோடு*
*உடனுறைவு ஆக்குக உயர்ந்த பாலே!**

என்று அந்தப் பாட்டை முடித்திருந்தார்.

இந்தப் பாட்டுத்தான் அந்த நல்லிசைச் சான்றோரின் இறுதிப் பாட்டாயிற்று. பாரிக்கும் அவருக்கும் இருந்த நட்புக்கு உவமையாக வேறு எதைச் சொல்ல முடியும்? பாரியை எண்ணியபடியே அப் புலவர் பெருமான் தீ மூட்டி அதில் பாய்ந்து உயிர் நீத்தார். அங்கு உள்ளவர் இந்தச் செய்தியை அறிந்து தடுத்தும், கபிலர் தம் கருத்தின்படியே

---

* மற்று யான்; மற்று: அசைநிலை. யான்மேயினேன் அன்மை ஆயினும் - நான் பொருந்துபவன் அல்லனானாலும். இம்மை போலக் காட்டி - இம்மையிலே உன்னை எனக்குக் காட்டியது போலக் காட்டி. உம்மை - அந்த உலகத்தில். இடையில் காட்சி - இடைவிடாத காட்சியாக. உடனுறைவு - உடன் வாழ்வதை. உயர்ந்த பால் - நல்லூழ்.

இவ்வுடம்பைத் தீக் கடவுளுக்கு உணவாக்கிப் பாரியோடு கலந்துகொண்டார்.

அவ்விருவருடைய நட்பின் பெருமையைத் தமிழுலகத்துச் சான்றோர் வியந்து பாராட்டினர். கபிலர் தீக்குளித்த இடத்தில் ஒரு கல்லை நாட்டி அவ்விடத்தில் உள்ள மக்கள் வழிபட்டார்கள். அந்தக் கல்லுக்குக் கபிலக் கல் என்ற பெயர் வழங்கியது.*

---

* திருக்கோவல் வீரட்டத்தில் உள்ள சிவாலயத்தில் செய்யுளுருவத்தில் அமைந்திருக்கும் கல்வெட்டிலிருந்து இந்தச் செய்தி தெரியவருகிறது.

# திருமணம்

கபிலர் உயிர் நீத்ததை அறிந்த அங்கவையும் சங்கவையும் துடித்துப் போயினர். தம் தந்தையை இழந்த போதுகூட அவர்களுக்கு அத்துணைத் துயரம் உண்டாக வில்லை.

மணமாகாத கன்னிப் பெண்களாக வாழ்ந்த அவர்களைப் புலவர் உலகம் மரியாதையோடு பாராட்டியது. புலமை மிக்க ஔவைப் பிராட்டியார் பாரிவேளை நன்கு அறிந்தவர். கபிலர் பெருமையையும் உணர்ந்தவர். அவருக்குக் கபிலர் தீப் பாய்ந்த செய்தியோடு, பாரியின் மகளிர் அந்தணர் வீட்டில் வாழ்ந்து வந்ததும் தெரியவந்தது. அவ்விடத்துக்குச் சென்று பாரி மகளிரைக் கண்டார்.

ஔவையாரைக் கண்டதும் அந்த மகளிர் இருவரும் புலம்பி அழுதார்கள். கடல் உடைத்துக் கொண்டதுபோல, அதுகாறும் தேங்கி யிருந்த துயரம் வெள்ளமாகப் பொங்கியது. "எங்களுக்காகக் கபிலர் எத்தனை தொல்லைகளை அடைந்தார்! எங்களால்தான் மனம் வெறுத்துப் போய் உயிரை மாய்த்துக்கொண்டார். நாங்கள் பூமிக்குப் பாரமாக வாழ்கிறோம். அந்தப் புலவர்பிரான் புண்ணியம் பண்ணியவர். எங்கள் தந்தையாருடன் சேர்ந்து கொண்டார். நாங்களோ எல்லாவற்றையும் இழந்தோம். எல்லாரையும் இழந்தோம். நாளைக்கு என்ன நிகழப் போகிறது என்று தெரியாமல், யாருக்கும்

பயன்படாத பெண்மையைச் சுமந்துகொண்டு உயிர் வாழ்கிறோம்!'' என்று அரற்றினார்கள்.

ஔவையாருக்கே அவர்களுடைய நிலை பொறுக்க முடியாததாக இருந்தது. பெண்ணுள்ளம் பெண்ணுள்ளத்தை அறியும் அல்லவா? அவர்களின் கண்ணைத் துடைத்தார். ''என் கண்மணிகளே, நீங்கள் வருத்தப் படவேண்டாம். எல்லாம் இறைவனுடைய ஆணையின்படி நடக்கும். நாம் வருந்தி என்ன செய்வது! நான் முன்பே உங்களிடம் வந்து உங்களைப் பார்த்திருக்க வேண்டும். கபிலருடைய பாதுகாப்பில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நல்ல வேளை! இப்போதாவது வந்தேனே என்று ஆறுதல் அடைகிறேன். இனி நீங்கள் கவலையுற வேண்டாம். சென்றவற்றை மறந்து விடுங்கள். பாரியையும் கபிலரையும் மீட்டும் என்னால் கொண்டு வர முடியாது. அவர்கள் நன்றாக வாழ்ந்தார்கள்; மறைந்தார்கள். உங்கள் வாழ்வு இனிமேல்தான் தொடங்கப்போகிறது. பாரியின் புண்ணியமும் கபிலரின் தவமும் உங்களைக் காப்பாற்றும். உங்களை இல்வாழ்க்கையிலே நிலைநிறுத்திய பின்புதான் வேறு வேலை பார்ப்பதென்று நான் உறுதி பூண்டு விட்டேன். இறைவன் திருவருள் துணை செய்ய வேண்டும்'' என்று தம்முடைய அன்பையெல்லாம் குழைத்துப் பேசினார்.

ஔவையாரின் பெருமையை அங்கவையும் சங்கவையும் நன்கு உணர்ந்தவர்கள். அவர் சொல்லுக்குரிய மதிப்பையும் உணர்வார்கள். ஆகவே, அப் பிராட்டியார் இரக்கமும் அன்பும் கொண்டு கூறிய அச் சொற்கள் அவர்களுடைய துயரத்துக்கு மருந்து,

போல உதவின. 'இனி யார் நமக்குத் துணை?' என்று ஏங்கி யிருந்த அவர்களுக்கு ஔவையாரின் பேச்சு நம்பிக்கையை உண்டாக்கியது. நிழல் இல்லாத பாலை வனத்தில் தனி மரம் ஒன்று கிடைத்தது போல இருந்தது.

"நீங்கள் என்ன சொன்னாலும் அப்படியே செய்ய ஆயத்தமாக இருக்கிறோம். நீங்கள் கைவிட்டுவிட்டால் நாங்களும் கபிலர் காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டியதுதான்" என்று அவர்கள் ஔவையாரிடம் தெரிவித்துக் கொண்டார்கள்.

"இனிமேல் அப்படிப் பேசாதீர்கள். நீங்கள் எல்லா நன்மைகளையும் பெற்று நீடூழி காலம் இன்ப வாழ்வு வாழப் போகிறீர்கள்; மனம் தளராமல் இருங்கள்" என்று சொல்லி, அம் மூதாட்டியார் விடை பெற்றுச் சென்றார். அதுமுதல் பாரி மகளிருக்குரிய கணவரைத் தேடும் பணியை அவர் மேற்கொண்டார்.

திருக்கோவலூரைத் தலைநகராகப் பெற்ற நாட்டுக்கு மலாடு என்று பெயர். மலையமான் நாடு என்பதே அப்படி மருவி வழங்கியது. அதை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் மலையமான் என்ற பொதுப் பெயரை உடையவர்கள். சிறந்த வள்ளலாக விளங்கிய மலையமான் திருமுடிக் காரி என்பவன் அந்தக் குலத்தில் உதித்தவனே. அவனும் ஏழு வள்ளல்களில் ஒருவனாக எண்ணப் பெறுபவன். அந்த மலையமான் குலத்தில் அப்போது அரசாண்டிருந்த மன்னனுக்கு இன்னும் மணமாகவில்லை என்று ஔவையார் அறிந்தார். 'நல்ல குலமாதலின் பாரி மகளிர் இருவரையும் அம் மன்னனுக்கு மணம் முடித்து வைத்துவிடலாம்

என்று ஔவையாருக்கு ஓர் எண்ணம் எழுந்தது. அந்த எண்ணத்தைச் செயலாக்க முற்பட்டார்.

இறைவன் திருவருள் துணை நின்றமையால் அவருடைய முயற்சி முதலிலிருந்தே தடையில்லாமல் நடைபெற்றது. கடைசியில் அவர் எண்ணம் நிறைவேறியது. கோவலூர் மன்னன் பாரி மகளிரை மணந்துகொள்ள உடன்பட்டான்.

இந்த மணத்தை நிறைவேற்றும் பொறுப்பு முழுவதையும் ஔவையாரே மேற்கொண்டார். தமக்குத் தெரிந்த செல்வர்களுக்கெல்லாம் திருமண ஓலை போக்கினார். சேர சோழ பாண்டியர்களையும் திருமணத்துக்கு வரவேண்டும் என்று பாடல்களை எழுதியனுப்பினார்.

திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சேர சோழ பாண்டியர்களும் அதற்கு வந்து சிறப்பித்தார்கள். அங்கவையும் சங்கவையும் மலையமான் குலத்தில் கற்புத் தெய்வங்களாகப் புகுந்தனர். அவர்களுடைய தந்தையாகிய பாரியும் ஆசிரியராகிய கபிலரும் இல்லை என்ற குறையையன்றி, அந்தத் திருமணம் ஒரு குறுநில மன்னனுக்குரிய கல்யாணமாக இல்லாமல் மிக உயர்ந்த முறையில் நடைபெற்றது. எந்தக் கல்யாணத்துக்கும் முடியுடை வேந்தர் மூவரும் ஒருங்கே வந்ததில்லை. 'பழைய பகையைப் பாராட்டாமல் வரவேண்டும்' என்று ஔவையார் எழுதியதை மதித்து அவர்கள் இந்தத் திருமணத்துக்கு வந்து அப் பெண்களை வாழ்த்திச் சென்றார்கள்.

அங்கவையும் சங்கவையும் பாரியையும் கபிலரையும் நினையாத நாளே இல்லை. புலவருலகம் அவ்விரு நல்லோர்களிடையே விளங்கிய அரிய நட்பைப் போற்றிப் பாராட்டியது.

பாரி புலவர் உள்ளத்தில் வாழ்ந்தான். அவன் புகழ் புலவர் பாக்களில் விரிந்தது. இன்றளவும் பாரியைப் புலவர்கள் பாடிக்கொண்டே வருகிருர்கள். தமிழ் இலக்கியத்தில் அவனுடைய வரலாற்ருேடு தொடர்புடைய பாடல்கள் ஒளி விடும் மணிகளாகத் திகழ்கின்றன. பாரி வேள் புகழுடம்பில் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிருன்.